நாம் வணங்கும் தெய்வங்கள்

வடிவம் – வரலாறு – வழிபாடு

# நலம் பல நல்கும் நாராயணர்



வெளியீடு

**சர்வானந்தமய பீடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் பல நல்கும்

# நாராயணன்

## விஷ்ணு ~ வைஷ்ணவம்

ஓர் அறிமுகத் தொகுப்பு




தொகுப்பாசிரியர்:

வித்யாபூஷணம், சாதக சிரோமணி

**ப.சிவானந்த சர்மா** B.A.(Hons)

(கோப்பாய் – சிவம்)



வெளியீடு

**சர்வானந்தமய பீடம்**

19.10.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீட்டுத் தரவுகள்

நூலின் பெயர் : நலம் பல நல்கும் நாராயணர்

மொழி : தமிழ்

விடயம் : மஹாவிஷ்ணு வழிபாட்டின் தோற்றம், வளர்ச்சி, தத்துவம், வழிபாட்டுமுறைகள் முதலியன.

தொகுப்பாசிரியர் : பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா B.A.(Hons) (கோப்பாய் சிவம்)

கணனி வடிவமைப்பு : ஸ்ரீவித்யா கணனிப்பதிப்பகம், 'ஸ்ரீநகரம்', அளவோடை வீதி, இணுவில் மேற்கு, சுன்னாகம். தொ. பே. 021 224 1504

முதற்பதிப்பு : 14 – 01 – 2003. ஸ்ரீவத்ஸ. இராஜேஸ்வரக் குருக்கள் பெருமாள் கோவில், யாழ்ப்பாணம்.

சீராக்கம் செய்யப்பெற்ற இரண்டாம் பதிப்பு : ஒக்டோபர் 2013. சர்வானந்தமய பீடம்

அச்சுப்பதிப்பு : ஷாம்பவி பதிப்பகம் 276, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். தொ. பே. 021 222 4143

விலை : 150 /=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னீடு

பெருமாள் எனப் பெருமையோடும், பேரன்போடும் அழைத்துப் போற்றப்படுகின்ற விஷ்ணுவின் வழிபாடு தொன்றுதொட்டு நிலவிவருகிறது. வைதிக மரபில் வேதகாலம் முதல் இன்றுவரை விஷ்ணுவுக்கு முதலிடம் உண்டு. சிவாகம வழிபாட்டு மரபிலும் குறிப்பிடத்தக்க ஓரிடம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. பழந்தமிழர் மரபிலும் சங்ககாலத்திலே தனித்துவமான ஒரு தெய்வமாக மாயோன் எனும் திருமால் போற்றப்படுகின்றார். கிருஷ்ணன் என்னும் கண்ணன் கதைகளும் விஷ்ணுவின் தசாவதாரப் பெருமைகளும் பாரத பூமியில் மட்டுமன்றி இந்துசமயம் பரவியிருக்கும் நாடுகளிலெல்லாம் பேசப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் வடநாட்டில் மிக அதிகமாகவும் தென்னாட்டில் சைவசமய வழிபாட்டுக்குச் சமமாகவும் வைஷ்ணவ சமய நெறிமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. ஈழத்தைப் பொறுத்தவரை விஷ்ணு கோவில்கள் பல இருக்கின்றன. விஷ்ணுவை விரும்பி வழிபடுவோர் பலர் இருக்கின்றனர். இருந்தாலும், ஆறுமுகநாவலரின் சைவசித்தாந்தச் செந்நெறி வழிகாட்டலில் வளர்ந்தமையாலும் பண்டிதமணியவர்கள் குறிப்பிடும் கந்தபுராண கலாசாரத்தில் ஊறியிருப்பதாலும் சிவாகமவழிபாடு பற்றியும் சைவசமய நெறிமுறை பற்றியும் நன்கு தெரிந்து நாளாந்த வாழ்க்கையில் கைக்கொள்ளுமளவுக்கு விஷ்ணு வழிபாடு பற்றியும் வைஷ்ணவ நெறி பற்றியும் நம்மவர்கள் தெரிந்து கொண்டிருக்கவில்லை.

**உயர்தரப்பரீட்சையில் இந்துசமயம், இந்துநாகரிகம் முதலிய பாடங்களில் வைஷ்ணவம் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு ஆசிரியர்கள்கூடச் சிரமப்படும் நிலை இங்குள்ளது.** இந்நிலையில் விஷ்ணு வழிபாட்டின் தோற்றம், வளர்ச்சி, வைஷ்ணவநெறி, தத்துவ சிந்தனைகள், சமய வழிபாட்டு முறைகள், விரதங்கள் ஆகிய பல்வேறு தகவல்களை ஒன்றுதிரட்டி நூல்வடிவில் தரவேண்டும் என்ற நோக்கில் இச்சிறுநூல் வெளிவருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகையதொரு நூல் வெளிவரவேண்டுமென நீண்டநாளாக ஆவல் கொண்டிருந்த **பிரம்மஸ்ரீ வ.இராஜேஸ்வரக் குருக்கள்** அவர்கள் **(பிரதமகுரு, வண்ணை வரதராஜர் கோயில்)** அடிக்கடி என்னோடு இதுபற்றி ஆலோசித்திருக்கின்றார். அவருடைய தூண்டுதல் காரணமாக இந்நூல் அவருடைய பதிப்பாகவே முதற்பதிப்பு வெளிவந்தது. பிரதிகள் யாவும் தீர்ந்துவிட்ட நிலையில் நூலின் தேவை உணரப்பட்ட நிலையில் சர்வானந்தமய பீட நூல்வெளியீட்டு வரிசையில் இன்று மீண்டும் இந்நூல் சில மாற்றங்களுடன் வெளிவருகிறது.

இந்நூலின் முதற்பதிப்பு உருவாக்கத்துக்கு வேண்டிய பல ஆலோசனைகளையும் தகவல்களையும் எடுத்துரைத்ததோடு பல அரிய நூல்களையும் வழங்கிய **பிரம்மஸ்ரீ சா. குமரேச சர்மா B.A.(Hons)** அவர்களுக்கு எனது அன்பு நன்றிகள். வழிகாட்டிய எனது தந்தையார் பண்டிதர் **பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மா** அவர்களுக்கு எனது வணக்கங்கள்.

பிரபல ஓவியர் மணியம் செல்வன் அவர்களால் வரையப்பெற்று நவம்பர் 1996 "தினமணி" தீபாவளி மலரில் இடம்பெற்றிருந்த தசாவதாரப் படங்களை இங்கு எடுத்தாண்டிருக்கிறோம். அவர்களுக்கு எமது நன்றிகள்.

ப.சிவானந்தசர்மா
(கோப்பாய் சிவம்)

சர்வானந்தமய பீடம்
"ஸ்ரீநகரம்" அளவோடை வீதி,
இணுவில் மேற்கு, சுன்னாகம்.

பொற்சைவ வைணவமும் புத்தர்பிரான் பொன்னுரையும்
நற்சமணம் கிறிஸ்தவமும் நபிகள்பிரான் நல்லுரையும்
பற்பலவாய் இருந்திடினும் பைந்தமிழின் பண்பேற்று
கற்போரைப் பிடித்திழுத்துக் கனிதமிழின் சுவையூட்டி
நாயன்மார் நாவமுதும் நல்லாழ்வார் பாசுரமும்
காவியமாய் இந்நாட்டில் கதிர்வீசக் காண்கின்றோம்

– அமுதனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீமத் பரப்ரம்ம குரும் ஸ்மராமி
ஸ்ரீமத் பரப்ரம்ம குரும் பஜாமி
ஸ்ரீமத் பரப்ரம்ம குரும் வதாமி
ஸ்ரீமத் பரப்ரம்ம குரும் நமாமி

தேவாதிநாத கமலா ப்ருதநேச பூர்வாம்
தீப்தாந்தராம் வகுள பூஷண நாத முக்யை:
ராமாநுஜ ப்ரப்ருதிபி: பரிபூஷிதாக்ராம்
கோப்த்ரீம் ஜயந்திம் குரு பங்திம் அஹம் ப்ரபத்யே.

-குருபாரம்பர்ய ஸ்துதி.

வையம் தகழியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய
சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று

- பொய்கையாழ்வார்

அன்பே தகழியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் காரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்

- பூதத்தாழ்வார்

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று

- பேயாழ்வார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷ்ணு ஆலய தரிசனம்

## வழிபாடு செய்வது எப்படி?

விஷ்ணு ஆலயங்களை வழிபடச் செல்லும்போது நாம் தெரிந்து கொள்ளவேண்டியவை சில உண்டு. தொலைவில் செல்லும்போதே "கோபுரதரிசனம் கோடி புண்ணியம்" என்பதற்கிணங்கக் கோபுரத்தை வணங்கிக்கொண்டு சென்று கை, கால்களைச் சுத்திசெய்து ஆலய முன்றிலுக்குச் செல்லவேண்டும்.

கோயிலுக்கு வெளியே சிறியதிருவடி எனப்படும் ஆஞ்சனேயர் சந்நிதி இருக்கும். அங்கு சென்று அவரை முதலில் சேவிக்க (வணங்க) வேண்டும். கொடிமரத்துக்கு அருகில் வீழ்ந்து வணங்கி (அஷ்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்கள்) நமது ஆணவ முனைப்பை அகற்றி இறைவனைச் சரணடையத் தயாராக வேண்டும். பின்னர் துவார பாலகர்களைத் தரிசித்து வணங்கி அனுமதி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

அதன்பின் ஆழ்வார்கள் சந்நிதி, ஆசார்யர் சந்நிதிகள் இருக்குமானால் அவர்களைச் சேவித்துவிட்டு (குருவருள் இருந்தால்தான் திருவருள் பெறலாம்) அதன்பின் தாயார் சந்நிதிக்குச் செல்லவேண்டும். விஷ்வக்சேன கணபதி சந்நிதி இருக்கும் ஆலயங்களில் அவரை வழிபட்டபின் தாயாரிடம் செல்லலாம்.

பெரிய பிராட்டியார் எனப்படும் மஹாலக்ஷ்மி சந்நிதியில் துவார பாலகிகளை வணங்கி அனுமதி பெற்று உள்ளே சென்று அர்ச்சனை வழிபாடுகளைச் செய்துகொண்டு பிரதான சந்நிதிக்குச் செல்லவேண்டும். பிராட்டியின் பெரும் சிறப்பாக வைஷ்ணவம் பேசுவது 'புருஷகாரம்' என்பது. ஆன்மாக்களுக்காக ஆண்டிவனிடம் பரிந்துரை செய்யும் இயல்பு என இதனை விளக்கலாம். அதனால், முதலில் பிராட்டியை வணங்கியபின் பெருமாளிடம் செல்வது மரபு.

கருடாழ்வாரை சேவித்து பகவானைத் தரிசிக்க அனுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தருமாறு வேண்டிக்கொண்டு உள்ளே சென்று பகவானை சேவிக்க வேண்டும். அர்ச்சனை வழிபாடுகள் செய்து துளசிதீர்த்தம் பெற்று சடாரி எனப்படும் சடகோபம் தலையில் தரிப்பித்து சந்நிதிகளைப் பிரதட்சணம் செய்து வணங்கவேண்டும். விஷ்ணு சந்நிதியை வலம்வந்து வணங்கும்போது நான்குதரம் வலம்வரவேண்டும் என்பதே முறை. இதனைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அவல், லட்டு, புளிச்சாதம் என்பன விஷ்ணுவை மகிழ்விக்கும் என்பதனால் அவற்றை நிவேதனம் செய்தல் நன்று.

வழிபாடுகள் முடிந்ததும் ஒருபுறத்தில் அமைதியாக உட்கார்ந்து பிரார்த்தனை செய்தபின் எழுந்து மறுபடியும் துவாரபாலகர்களை வணங்கி அனுமதி பெற்றுக்கொண்டு வீடுசெல்லவேண்டும்.

**இறுதி வழிபாடு யாருக்கு?**

விஷ்வக்சேனர் இங்கு சண்டேஸ்வரருக்குரிய இடத்தைப் பெறுகிறார். இவருக்கே இறுதிவழிபாடு உரியது. இவர் வைஷணவ ஆசார்ய பரம்பரையில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**வைஷ்ணவத்தில் விநாயகருக்குரிய இடம்.**

பல வைஷ்ணவத் தலங்களில் விநாயகருக்கும் சந்நிதி இருக்கிறது. இவருக்கே முதற் பூஜையும் நடைபெறுகிறது. இத்தலங்களில் விநாயகர் விஷ்வக்சேன கணபதி என்றும் தும்பிக்கை ஆழ்வார் என்றும் போற்றப்படுகிறார்.

**சடகோபம் தாபித்தலின் முக்கியத்துவம்.**

விஷ்ணு ஆலயங்களில் திருப்பாதங்கள் பதிக்கப்பெற்ற திருமுடி ஒன்று இருக்கும். வழிபாட்டின் முடிவில் அடியார்களின் சிரசில் இதனைத் தாபித்து ஆசிவழங்குவர். ஆழ்வார்களில் முக்கியமானவரான சடகோபர் என்னும் நம்மாழ்வாரின் பாதங்களையே இத்திருமுடி தாங்கிநிற்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்தான் இதற்குச் சடகோபம் என்று பெயர். வைஷ்ணவ நெறியை நிலைத்தோங்கி வளரச்செய்த இராமாநுஜாசாரியார் வைஷ்ணவ சமய தத்துவ உண்மைகளைக் கண்டறிவதற்காகப் பெருந்தவம் மேற்கொண்டு சடகோபருடைய பூரண திருவருள் கிட்டவேண்டுமென்ற வேண்டுகோளுடன் அவரது திருவடிகளைச் சிரம்மீது பதிக்குமாறு வேண்டிக்கொண்டார். இதனால் தான் பாதுகை என்பது வைஷ்ணவத்தில் முக்கியத்துவம் பெறுகிறது.

இராமாயணத்திலும் பாதுகை முக்கியத்துவம் பெறுவதைக் காண்கிறோம். இராமருடைய பிரதிநிதியாக அவரது பாதுகைகளைச் சிரம்மீது எடுத்துச்சென்ற பரதன் அவற்றையே சிம்மாசனத்தில் வைத்து ஆட்சி நடத்தியமை தெரிந்ததே.

சைவசமயநெறிமுறையிலும் திருவடி தீட்சை முக்கியமான ஒன்று. சிவபிரானிடம் திருவடி தீட்சை பெறுவதற்காக அப்பரடிகள் அழுதழுது வேண்டிக்கொண்டதும் "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என்று சிவபிரான் அருக்குச் "சென்னிமிசைப் பாதமலர்" சூட்டியதும் கவனிக்கத்தக்கது. அடியார்மடத்திலே சுந்தரருக்குச் சிவபிரான் சிவனடியார் வேடத்தில் வந்து திருவடி தீட்சை வழங்கக் காண்கிறோம்.

சரணாகதி தத்துவமே வைஷ்ணவத்தின் உயிர்நாடி. இறைவனுக்கு நம்மை அடிமையாக்கி முற்றுமுழுதாக நம்மை அவனுக்கே அடைக்கலம் கொடுத்து அவனது சரணங்களில் சரணாகதி அடைதலே பிரபக்தி எனும் உயர்ந்த பக்திநிலையாகும். அதனால்தான் சரணம் - திருவடி - இங்கு முதன்மை பெறுகிறது. சடாரி எனும் திருமுடி தரித்தலைப் பெரும் பேறாகக் கருதுவர் விஷ்ணு அடியார்கள்.

**திருமண் காப்பிடுதல் (நாமம் தரித்தல்)**



விஷ்ணு ஆலயங்களில் கிடைக்கும் வெள்ளைக் களிமண்ணினால் நெற்றியில் வளைந்த கோடு இட்டு நடுவில் ஸ்ரீசூர்ணம் என அழைக்கப்படும் குங்குமத்தினால் நேர்கோடும் எழுதி நாமம் இட்டுக் கொள்கின்றனர். வாழ்க்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையாமையை நினைவூட்டுவதாகவும் எந்நேரமும் இறைசிந்தனையைத் தூண்டுவதாகவும் இது அமைகிறது. அதுமட்டுமல்லாமல் எந்நேரமும் காவலாகவும் இருக்கிறது. காப்பு என்ற பெயரே இதைக் காட்டுகிறது.

விபூதி ரக்ஷை எனக் கூறப்படுவதும் இதனாலன்றோ? திருமண் திருமாலையும் ஸ்ரீ சூர்ணம் திருமகளையும் குறிக்கும்.

## விஷ்ணுவின் பல்வேறு தோற்றப்பொலிவுகள்

"மறந்தும் புறந்தொழார்" எனப் புகழப்படும் வைஷ்ணவர்கள் விஷ்ணு ஆலயங்களில் சந்தான கோபாலர், வேணுகோபாலர், ஸ்ரீரங்கநாதர் முதலிய விஷ்ணுவினுடைய பல்வேறு திருவுருவங்களையும் ஸ்ரீராமர், நரசிம்மர் முதலிய அவரது அவதாரத் தோற்றங்களையும் மஹாலக்ஷ்மி, கருடாழ்வார்(பெரிய திருவடி), ஆஞ்சனேயர்(சிறிய திருவடி), ஆழ்வார்கள், ஆசார்யர்கள் ஆகியோரையும் சக்கரத்தாழ் வாரையும் நவக்கிரகங்களையும் மட்டுமே பரிவார சந்நிதிகளில் பிரதிஷ்டை செய்து வழிபடுவர்.

## ஸ்ரீமந் நாராயணர்

நித்திய சித்தர்களுக்கன்றி யாருக்கும் எட்டாத **பரம்** என்று சொல்லப்படுகின்ற மிக உயர்ந்த நிலை.

## மஹாவிஷ்ணு

பூதேவி, சீதேவி சமேதராக சங்கு, சக்கரம், கதாயுதம், அபயகரம் ஆகியவற்றுடன் நின்ற கோலத்திலும் இருந்த கோலத்திலும் காட்சிதரும் நிலை. (கிடந்த திருக்கோலமே ஸ்ரீரங்கநாதர் என்னும் அனந்த சயனப் பெருமாள் திருக்கோலம்).

நாந்தகம் எனும் கட்கம், சார்ங்கம் எனும் வில் என்பனவும் அவரது ஆயுதங்கள். பாஞ்ச ஜன்யம் என்னும் சங்கு சிவனது உடுக்குப் போல படைத்தல் தொழிலைக் குறித்த நிற்கிறது. அபயகரம் காத்தல் தொழிலைக் காட்டுகிறது. சிவனது கரத்திலுள்ள அக்கினி அழித்தலைக் குறிப்பதுபோல விஷ்ணுவின் கையிலுள்ள சுதர்சன சக்கரம் அழித்தலைக் குறிக்கிறது. நம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்வில் ஏற்படும் சுகதுக்கங்களாகிய அம்புகளைத் தடுத்துநின்று சமநிலை வாழ்வைத் தருவது கௌமேதகம் எனும் கதாயுதமாகும். நாந்தகம் என்னும் வாள் (கட்கம்) அஞ்ஞானத்தை அழிக்கின்றது. சார்ங்கம் என்னும் வில் தீவினைகள் வந்து தீண்டாமல் தடுக்கின்றது. மார்பில் அணிந்திருக்கும் கௌஸ்துப மணி பிரபஞ்சத்துள் ஆடும் அந்தராத்மாவைக் குறிக்கும். அதாவது சரீர சரீரி சம்பந்தம் என்ற தத்துவத்துக்கிணங்க நம் உயிரினுள் உயிராகக் கலந்துநிற்கும் இறைவனைச் சுட்டிநிற்கிறது. மஹாவிஷ்ணுவின் மார்பில் இருக்கும் ஸ்ரீவத்சம் என்னும் மறு சகலத்திற்கும் ஆதாரமாக விளங்கும் பிரதான இயல்பைக் காட்டுகிறது.

**அநந்த சயனப் பெருமாள் (ஸ்ரீரங்கநாதர்)**

பாற்கடலில் அறிதுயில் மேற்கொண்டிருக்கும் தோற்றம். அலைவீசிநிற்கும் பாற்கடலில் ஆதிசேஷன் (அநந்தன்) எனும் ஆயிரம் தலை நாகபாம்பாகிய படுக்கையில் சயனம் செய்திருக்கும் ஸ்ரீரங்கநாதப் பெருமானுக்கு அந்த அநந்தனே தன் விரிந்த படங்களால் குடை பிடித்துநிற்பான். பாதங்களருகில் ஸ்ரீதேவி எனும் மஹாலக்ஷ்மி ( சில விக்கிரகங்களில் பூதேவி எனும் பூமித்தாயும்) பாதசேவை செய்திருப்பர். நாபிக்கமலத்தில் நான்முகன் தோன்றிப் படைத்தல் தொழிலைச் செய்ய இவரே காத்தல் தொழிலைச் செய்கிறார்.



பால் வெண்மையானது. சுத்தமானது. வெள்ளை உள்ளங்களில் பகவான் வீற்றிருத்தலின் குறியீடு இது. அவரது திருவருள் பாற்கடல்போல் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக உருவாய்க் கிடப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திருமாலின் சயனக் கோலங்கள் பத்துவகைப்படும்.

1. ஜல சயனம்
2. தல சயனம்
3. புஜங்க சயனம்(சேஷ சயனம்)
4. உத்யோக சயனம்
5. வீர சயனம்
6. போக சயனம்
7. தர்ப்ப சயனம்
8. பத்ர சயனம்
9. மாணிக்க சயனம்
10. உத்தான சயனம்

### சந்தானகோபாலர்




படம்விரித்த நாகஇருக்கையில் காற்பெருவிரலைச் சுவைத்தபடி வீற்றிருக்கும் குழந்தைக் கிருஷ்ணன். சந்தான விருத்திக்காக இந்தத் திருவுருவம் பிரதிஷ்டை செய்து வழிபடப்படுகிறது.



### குருவாயூரப்பன்

சங்கு, சக்கரம், புல்லாங்குழல், கதை இவற்றடன் குருவாயூர்த் தலத்தில் காட்சிதரும் ஒரு சிறப்பான பாலகிருஷ்ண வடிவம் இது.

### வெங்கடேசர்



சங்கு, சக்கரம், அபயகரம், ஆகியவற்றுடன் இடது கீழ்க்கரத்தைத் தொடையில் தாங்கிநிற்பதுபோன்ற (ஊரு ஹஸ்தம்) ஒரு தனித்துவமான நின்ற திருக்கோலம் இது. திருப்பதித் தலத்துக்கே உரிய சிறப்பு வடிவம்.

### பாலகிருஷ்ணர்

வெண்ணெய் திருடியுண்ணும் பால லீலைகள் செய்கின்ற குழந்தைக் கண்ணன் வடிவம் இது. சாதாரணமாக வீடுகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வழிபாட்டுக்காக இந்தப் படத்தினைப் பலரும் வைத்திருப்பார்கள். கிருஷ்ண ஜயந்தி நாளில் வழிபட உகந்த வடிவம் இது.

**வேணுகோபாலர்**

குழலூதிநிற்கும் பாலகிருஷ்ண வடிவம். அருகில் பசுக்கன்றையும் காணலாம்.



**ஸ்ரீராமர்**

சீதாபிராட்டியாரும் இலக்குவநம்பியும் இரு புறமும் நிற்க (அநுமன் பாதசேவை செய்ய) கோதண்டமென்னும் வில்லேந்தி நிற்கும் அவதாரவடிவம்.

**நரசிம்மர்**



லக்ஷ்மி நரசிம்மர் என்று கூறப்படுவதற்கிணங்க லக்ஷ்மியுடன் கூடிய நரசிம்ம அவதார வடிவம் இது. கொடூரமான ஒரு தோற்றமாக இது தோன்றினாலும் பிரஹலாதனால் சாந்தப்படுத்தப்பட்டபின் அருள்சுரக்கும் ஒரு திருவுருவமாகக் கருதப்படுகிறது.

லக்ஷ்மியுடன் இணைந்த நிலையிலும் தனியாகவும் வழிபடப்படுகிறார். பாரதத்திலே பல தலங்கள் நரசிம்மருக்கென்று உள்ளன. பாலநரசிம்மர், சயன நரசிம்மர், பிரகலாத வரதர், யோக நரசிம்மர், பூமி நரசிம்மர், லக்ஷ்மி நரசிம்மர், உக்ர நரசிம்மர், வரத நரசிம்மர், முதலிய பல்வேறு நரசிம்ம வடிவங்கள் உள்ளன. சிறந்த உபாசனா மூர்த்தியாக அடியார்கள் பலரால் ஆத்மார்த்தமாக வழிபடப்படும் பெருமையும் உண்டு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்வந்திரி



தேவரும் அசுரரும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்தபோது அங்கிருந்து அற்புதமான பொருட்கள் பல கிடைத்தன. லக்ஷ்மி, சந்திரன், கௌஸ்துபம், சுரா ஆகியவற்றுடன் அமிர்தகலசம் ஏந்தியவாறு தன்வந்திரி என்ற தேவரும் தோன்றினார். சங்கு, சக்கரம், அமிர்தகலசம், சிறு கரண்டி ஆகியவற்றுடன்கூடிய நான்கு கரங்களுடன் விஷ்ணு அம்சமாக அவர் வழிபடப்படுகிறார். ஆயுர்வேதத்தை உலகுக்கு வழங்கியவர் இவரே என்பர். காசிமன்னனாக இவர் இருந்ததாகச் சில வரலாறுகள் கூறுகின்றன.

## தத்தாத்திரேயர்



யாவும் கடந்தவர் என்ற கருத்தில் ஓர் அவதூதரென்று இவர் கூறப்படுகிறார். அத்ரி முனிவர், அநசூயை தம்பதிகளின் புதல்வர் இவர். கற்புக்கரசியாகிய அநசூயையை மும்மூர்த்திகளும் சென்று சோதித்துப் பார்த்து அவளது கற்பின் மகிமையை வியந்து மகிழ்ந்து மும்மூர்த்திகளின் அம்சமாக ஒரு புதல்வனை வரமாகக் கொடுக்கின்றனர். அவ்வாறு பிறந்தவரே தத்தாத்திரேயர். யாரையும் குருவாகக் கொள்ளாமல் நாராயணரையே குருவாகக்கொண்டு துறவியாகிய இவருக்குப் பல சீடர்கள் இருந்தனர். நால்வேதங்களும் இவரைக் குருவாகக் கொண்டிருந்தன. பாண்டவர் இவரை வணங்கி மறுபிறப்பில் முத்தியடைந்தனர். கார்த்தவீர்யார்ச்சுனன் இவரை வழிபட்டு ஆயிரம் கரங்கள் பெற்றான். பசு ஒன்றும் நான்கு நாய்களும் இவரைச் சூழ்ந்திருக்கும். மூன்று தலைகளுடன் சூலம், உடுக்கு, சங்கு, தாமரை, கதாயுதம், கமண்டலம் ஆகியவற்றை ஏந்திய ஆறு திருக்கரங்களுடன் இவர் சித்திரிக்கப்படுகிறார். 'அவதூத காரிகை' இவரால் இயற்றப்பட்ட சிறந்த ஒரு நூலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷ்வக்சேனர்

விஷ்ணுவின் உலகத்தில் படைத்தலைவராக இருப்பவர் இவர். ஐப்பசிப் பூராடத்தில் தோன்றிய இவரது மனைவி ஸூத்திரவதி. விக்கினங்களைக் களைந்து செயல்கள் யாவற்றையும் வெற்றியுடன் முடிப்பதற்கு இவர் துணைசெய்கிறார். இவ்வகையில் இவர் விநாயகரைப் போன்றவர். அதனால்தான் விஷ்ணு கோவில்களில் விஷ்வக்சேன கணபதி என்று விநாயகர் முதலில் வழிபடப்படுகிறார். அதேநேரம் வைஷ்ணவத்தில் இறுதி வழிபாடும் இவருக்குத்தான். விஷ்வக்சேன சண்டேஸ்வரர் என இவர் அழைக்கப்படுகிறார்.

சங்கு, சக்கரம், கதை, அபயஹஸ்தம் ஆகியவற்றுடன் வெண்டாமரையில் வீற்றிருக்கும் இவர் நீண்ட மீசையும் சடையும் கொண்டவர். வைஷ்ணவ குருபரம்பரையில் முக்கியமான இவர் பெரியபிராட்டியாரிடம் உபதேசம் பெற்று நம்மாழ்வார் முதலியோருக்குக் குருவாக விளங்கியவர்.

இவர் படைத்தலைவராக இருப்பதால் சேனைமுதலியார் எனவும் அழைக்கப்படுகிறார்.



## ஹயக்கிரீவர்

சங்கு, சக்கரம், புஸ்தகம், ஞானமுத்திரை ஆகியவற்றைத் தாங்கியவராகக் குதிரைமுகத்துடன் விஷ்ணு அம்சமாகப் பாற்கடலிலிருந்து தோன்றியவர் இவர்.

## விஷ்ணு ஆலயங்களில் உள்ள ஏனைய திருவுருவங்கள்.

### கருடாழ்வார் (பெரிய திருவடி)

மஹாவிஷ்ணுவின் வாகனமாகிய கருடன், கருடாழ்வார் எனப் போற்றப்படுவதுடன் இவரை வழிபட்டு அனுமதி பெற்றபின்னரே மூலவரை வழிபடச் செல்லலாம். பெரிய திருவடி என்ற சிறப்புப் பெயரும் உண்டு. கருடனைக் காணுதல் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்ல சகுனம் என்பர். கருட தரிசனம் என இதனைக் கூறுவர். கும்பாபிஷேகம், ரதோற்சவம் முதலிய சிறப்பான வைபவங்களின்போது கருடன் வானில் வட்டமிட்டு பக்தர்களை மெய்சிலிர்க்கவைப்பதுண்டு.

## ஆஞ்சனேயர் (சிறிய திருவடி)

சரணாகதி தத்துவத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் அநுமன். வாயுபுதல்வனாகிய ஆஞ்சனேயப் பெருமானுக்கு சைவ சமயத்தில் வைரவப் பெருமானுக்கு வழங்குவது போன்ற இடம் வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் ஆலயத்துக்குள் நுழையுமுன் இவரை வழிபடவேண்டும். உருத்திர அம்சமென்றும் விநாயகரின் அவதாரமென்றும் போற்றப்படுகின்ற காரணத்தினால் சைவசமயத்தவரும் இவரை விரும்பி வழிபடுகின்றனர். காவல் தெய்வமாக இருப்பதனால் தொழில் ஸ்தானங்களிலும் வீட்டுவாசலருகிலும் இவரது உருவப் படத்தை மாட்டி வழிபடுவர். வடைமாலை, வெற்றிலைமாலை முதலியவற்றைச் சார்த்தி வழிபடுதல் இவருக்குப் பிரீதியான வழிபாடாகும்.



## பிருந்தா தேவி (துளசி, துளவம், வனமாலை, திருத்துளாய்)

துளசிச்செடி வைஷ்ணவத்தில் மிகச் சிறப்பாகப் போற்றப்படுவது. பிருந்தாதேவியாகப் பிறந்திருந்தபோது விஷ்ணுவால் ஆட்கொள்ளப்பட்ட துளசி அவர்மார்பிலே என்றும் மாலையாக விளங்குகிறாள். வீடுகளில் துளசிமாடம் அமைத்துத் தினமும் விளக்கேற்றி வழிபடுதல் இல்லத்தரசிகளின் வழக்கம். விஷ்ணுவுக்குப் பிரீதியான துளசிச்செடியின் துளிர்கள், கதிர்கள் மூலம் அவரை அர்ச்சிக்கலாம். மாலை கட்டிச் சாத்தலாம்.ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துளசியை எல்லா நாட்களிலும் கொய்யக் கூடாது. ஞாயிறு, செவ்வாய், வெள்ளிக் கிழமைகளிலும் அட்டமி, துவாதசி, சதுர்த்தசி, பௌர்ணமி, ஆகிய திதிகளிலும் திருவோண நட்சத்திரத்திலும் மாதப்பிறப்புநாளிலும் இரவிலும் துளசி எடுக்கலாகாது.

அவசியமேற்படின் இரண்டு கீழிலைகளுடன் கதிரினை ஆய்ந்தெடுக்கலாம். மேலும், பத்திரத் தேவைகட்குத் துளசிமாடத்திலிருந்து பறிக்கக் கூடாது.

**சுதர்சன சக்கரம்**

திருமாலின் திருக்கரத்திலிருக்கும் சுதர்சனமென்னும் சக்கரம் முருகப்பெருமானின் வேலாயுதம்போலத் தனியான வழிபாட்டுக்குரியது.வல்லிபுரக்கோயிலின் கருவறையிலிருந்து அருள்பாலிப்பது சுதர்சன சக்கரமேயாகும். இது சக்கரத்தாழ்வார் என அழைக்கப்படுகிறது. திருமாலின் ஆயுதங்களான சங்கு, சக்கரம் இரண்டிற்குமே தனித்தனியாக தியானம், காயத்திரி முதலியன அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நால்வகைத் திருமேனிகள்

விஷ்ணுவினுடைய திருமேனிகளை உருவாக்கும்போது நான்குவிதமாகச் செய்யப்படுகின்றன.

1. யோகம் 2. போகம் 3. வீரம் 4. அபிசாரம்

இவற்றில் அபிசாரம் என்பது பிறரை அழிப்பதற்காக வழிபாடு செய்வதற்குரியது. இது இன்று வழக்கிலில்லை.

வீரம் என்பது வீரர்கள் தமது வெற்றிக்காக வழிபாடியற்ற உருவாக்குபவை. இத்தகைய மூர்த்திகளும் அபூர்வமாகவே காணப்படுகின்றன.

யோகம் என்பது துறவுநிலையிலுள்ளோர்க்குரியது.

போகம் என்பதே உலகியல் வாழ்வில் ஈடுபடும் எம்மனோர்க்குரியவை. இத்தகைய திருவுருவங்களே இன்று நாம் ஆலயங்களில் பெரிதும் காண்கின்ற தோற்றங்களாகும்.

## சதுர் மூர் த்திகள்

திருமாலின் வியூகத்திலுள்ள முக்கியமான நான்கு வடிவங்கள் சதுர்மூர்த்திகள் எனக் குறிப்பிடப்படுகின்றன.

சங்கர்ஷணன், பிரத்யும்நன், அநிருத்தன், வாசுதேவன் என்பனவே அவை.

இந்நான்கும் ஒன்றிணைந்த வடிவம் தோன்றும்போது,

கிழக்குநோக்கிய தெய்வீக முகமாக வாசுதேவரும்
தெற்குநோக்கிய சிங்கமுகமாக சங்கர்ஷணனும்
மேற்குநோக்கிய ருத்ர முகமாக அநிருத்தனும்
வடக்குநோக்கிய வராகமுகமாக பிரத்யும்நனும் அமைவர்.

இந்நான்கு வியூகங்களிலிருந்தும் மூன்று மூன்றாக 12 சிறப்பான மூர்த்தங்களும் அவற்றிலிருந்து பின்னர் உருவாகின்றவையுமாக 24 மூர்த்தங்கள் விஷ்ணுவின் விசேட மூர்த்தங்களாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைஷ்ணவ தத்துவ தகவற் களஞ்சியம்

**தத்துவத்திரயம் (முப்பொருள்)** - ஈஸ்வரன், சித்து, அசித்து

**ரஹஸ்யத்ரயம்** - அஷ்டாக்ஷரம், துவயமந்திரம், சரமசுலோகம்.

*அஷ்டாக்ஷரம்* - ஓம் நமோ நாராயணாய.

*துவயமந்திரம்* - 24 எழுத்து மந்திரம்.

நாராயணாய சரணௌ சரணம் ப்ரபத்யே
ஸ்ரீமதே நாராயணாய நம

*சரமசுலோகம்* - 32 எழுத்து மந்திரம்.

ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச.

**பஞ்ச சம்ஸ்காரம்-**

1. *தாபம்* விஷ்ணுவின் சின்னங்களாகிய சங்கு, சக்கரம் என்பவற்றை இரு தோள்களிலும் பொறித்தல்.
2. *புண்டரம்* நெற்றியிலும், மார்பிலும் திருமண், ஸ்ரீசூர்ணம் ஆகியவற்றால் திருநாமம் இட்டுக் கொள்ளுதல்.
3. *தாசநாமம்* விஷ்ணுவின் பெயர்களில ஒன்றுடன் தாசன் என்பதைச் சேர்த்துக் கடவுளின் அடியவன் என்ற கருத்தில் பெயர் தரித்தல்.
4. *மந்திரம்* தீட்சையின்போது குருவினால் உபதேசிக்கப்படும் அஷ்டாக்ஷர மந்திரத்தை இடைவிடாது ஓதுதல்.
5. *யோகம்* இடைவிடாமல் இறைசிந்தனையில் லயித்தல்.

**பஞ்சகர்மாக்கள்-**

1. *அபிகமனம்* - தினமும் நீராடிப் பிரார்த்தனை செய்தல்.
2. *உபாதானம்* - இறைபணி செய்யும் இவ்வுடலைக் காத்ததற்காகப் பொருளீட்டி உடலைப் பாதுகாத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. *இஜ்யம்* - வீட்டிலுள்ள விஷ்ணுவின் திருவுருவங்களுக்குப் பூஜை செய்தல்.

4. *சுவாத்யாயம்* - வேதம், வைஷ்ணவ சாஸ்திரம் முதலியவற்றைக் கற்றலும், ஆராயய்தலும்.

5. *யோகம்* - இடைவிடாமல் இறைசிந்தனையில் லயித்தல்.

**அர்த்தபஞ்சகஞானம்-**

1. *ஸ்வ ஸ்வரூபம்* - அடைபவன் (ஜீவன்) - தன்னை அறிதல்

2. *பர ஸ்வரூபம்* - அடையப்படுபவன் (விஷ்ணு) - பரம்பொருளை அறிதல்

3. *புருஷார்த்த ஸ்வரூபம்* -பெறும் பயன் (முடிவிலா இன்பம்) - பயனை அறிதல்

4. *உபாய ஸ்வரூபம்* - வழிவகை (பக்தி) -முக்திக்கு வழியை அறிதல்

5. *விரோதி ஸ்வரூபம்* - இடையூறுகள் (சாஸ்திரவிதிக்கு அமையாத செயல்கள்) - செய்யத்தகாதவற்றை அறிதல்

**விஷ்ணுவின் ஐவகை நிலைகள்:**

1. ***பரம்:*** யாவும் கடந்த பரம்பொருள் நிலை. நாராயணனாக நித்யவிபூதிகள் எனப்படும் முக்தர்கள் மட்டும் உணரும் உயர்நிலை.

2. ***வியூகம்-*** பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் நிலை.

* 3. **விபவம்-** அவதாரத் திருமேனிகள்- மச்சம், கூர்மம் முதலியன.

4. ***அந்தர்யாமித்வம்*** - எல்லா உயிர்களிலும் மறைந்து நின்று அருளும் நிலை.

5. ***அர்ச்சை*** - (உருவத் திருமேனி) நாம் பூஜைகள் மேற்கொள்ளும் திருவுருவங்களில் எழுந்தருளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் **பரம்** என்பது பிரபஞ்சத்தில் இருக்கும் நீர் போன்று யாருக்கும் எட்டாத நிலை. **வியூகம்** என்பது பாற்கடல் போன்று உயர்நிலை ஆன்மாக்களுக்குரியது. **விபவம்** என்பது வெள்ளப் பெருக்குப் போன்றது. அப்பெருக்கு நடைபெறும் இடத்தில் அந்த நேரம் இருப்பவர்க்கு மட்டும் கிடைக்கும். **அந்தர்யாமிதவம்** நிலக்கீழ் நீர் போன்றது. முயற்சினால் அடையத்தக்கது. **அர்ச்சை** குளம் போன்றது. யாருக்கும் எப்போதும் இலகுவாகக் கிடைக்கக் கூடியது.

## * விபவத்தின்மூன்று வகைகள்:

*1.* ***ஆவேசம்*** -ஒருகாரியம் நிகழ்வதற்காகத் திடீரெனத் தோன்றி அச்செயல் முடிந்ததும் மறைந்து வி:டுதல். (மச்சம், கூர்மம், நரசிம்மம் முதலியன)

*2.* ***அவதாரம்*** - தாமே முழுமையாக அவதரித்து மனித நிலையில் வாழுதல். (ராமர், கிருஷ்ணர் முதலியன)

*3.* ***அம்சம்*** - தமது அம்சங்களான சங்கு, சக்கரம், திருத்துளாய் (துளசி) முதலியவற்றைப் பிறப்பெடுக்கச் செய்தல். (ஆழ்வாராதியர்)

**திருமகளின் மூன்று சிறப்பியல்புகள்:**

*1. புருஷகாரம்* - ஆன்மாக்களுக்குப் பரிந்துரை செய்தல்.

*2. சேஷித்வம்* - விஷ்ணுவைத் தவிர ஏனைய யாவும் தமக்கே உடைமையாகக் கொண்டிருத்தல். (தாம் விஷ்ணுவுக்கு உடைமை)

*3. உபேயத்வம்* - அடையத்தக்க நிலை.

**வைஷ்ணவத் தமிழ் வேதம்** நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம். (முக்கியமாக நம்மாழ்வாரின் திருவாய்மொழி)

**வைணவத் தமிழ் உபநிடதம்** - ஆண்டாள் திருமொழி.

**இறைவனுக்குரிய ஆறுகுணங்கள் (ஷட்குணம்)** - தேஜஸ், வீரயம், ஞானம், பலம், ஐஸ்வர்யம், சக்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விஷ்ணுவிடம் சிறப்பாகக் கூறப்படும் ஓர் அருங்குணம்-**

தோஷபோக்யத்வம் (வாத்ஸல்யம்)

அடியார்களின் குற்றங்களையும் பொறுத்தருளும் கருணை.

**வைஷ்ணவ சமயம் கூறும் நான்கு படிநிலை:**

*தாஸ்யபாவம்* (சரியைபோன்றது) - அடிமைநிலை.

*வாத்ஸல்யபாவம்* (கிரியை போன்றது) தந்தைமகன் நிலை.

*சக்யபாவம்* (யோகம் போன்றது) தோழமை நிலை

*மதுரபாவம்* (ஞானம் போன்றது) நாயகீ பாவம்

**பக்தியின் ஒன்பது படிநிலைகள்**

இறைபுகழ்கேட்டல், இறைபுகழ் பாடுதல், இறைவனை நினைத்தல், பாதசேவை புரிதல், அர்ச்சித்தல், வணங்குதல், அடிமைநிலையில் பக்திசெய்தல், தோழமைநிலையில் பக்திசெய்தல், பூரண சரணாகதி அடைதல்.

## அவதார மகிமை

*அவதாரம் என்பது கீழ் இறங்கி வருதல் என்பதைக் குறிக்கும். இறைவன் தன்னுடைய உயர் நிலையில் இருந்து ஆன்மாக்களின் நன்மை கருதி அவர்களுக்கு அருள் செய்வதற்காக கீழ் இறங்கி வருதல் என்பதே பொருள்.*

*இந்து நெறியின் உட்பிரிவுகளில் சிலபிரிவுகள் இக்கோட்பாட்டை ஏற்றுக் கொள்கின்றன. சைவசமயப் பிரிவு அவதாரக் கோட்பாட்டை ஏற்பதில்லை. பிறவாயாக்கைப் பெரியோன் ஆகிய சிவபெருமான் உலகில் பிறப்பு எடுப்பதில்லை. ஆனால் தேவையான நேரத்தில் அவர் தேவையான வடிவத்தைப் பெற்றுக் கொள்வார் என்பது சைவமயக் கருத்தாகும். வைஷ்ணவ சமயத்தில்தான் அவதாரக் கோட்பாடு முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதார தத்துவம் இரண்டு முக்கிய சிறப்புக்களைக் கொண்டிருக்கிறது.

1. இறைவன் நம்மைவிட்டு எங்கோ வெகுதொலைவில் இருக்கவில்லை. நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்ற எண்ணம் இத் தத்துவத்தினால் நமது உள்ளங்களில் பதிகின்ற போது இறைநம்பிக்கை அதிகரிக்கின்றது. அதனால் வாழ்க்கையில் துன்பங்கள் ஏற்படுகின்ற பொழுது இறைவன் நமக்குத் துணை செய்வான் என்ற நம்பிக்கை உணர்வு தலைதூக்குகிறது.

2. இறைவன் அவ்வப்போது நம்மிடையே வந்து பிறந்து நம்மோடு வாழ்கிறான், நம்மை அவதானித்து கொண்டிருக்கிறான் என்ற உணர்வு தூண்டப்படுவதனால் தவறு செய்யாது நல்வாழ்க்கை வாழ வேண்டும் என்ற நல்லெண்ணம் உருவாக வாய்ப்பு ஏற்படுகிறது.

வைஷ்ணவ சம்பிரதாயங்களில் விஷ்ணுவை ஆபத்பாந்தவன் அல்லது அநாதரட்சகன் என்று அழைக்கப்படுவதற்கிணங்கப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு பிறவிகளை எடுத்து அவர் மக்களுக்கு உதவி செய்கிறார் என்ற கருத்து நிலவுகின்றது. இத்தகைய பல்வேறு அவதாரங்களில் 10 அவதாரங்களை முதன்மைப் படுத்தித் தசாவதாரம் எனக் கூறுவது வழக்கம்.

1. மத்ஸ்யம் (மச்சம்-மீன்)
2. கூர்மம் (ஆமை)
3. வராகம் (பன்றி)
4. நரசிம்மம்
5. வாமனர்
6. பரசுராமர்
7. தசதராமர்
8. பலராமர்
9. கிருஷ்ணர்
10. கல்கி.

**1.மத்ஸ்யம்**




ஒரு சந்தர்ப்பத்ததில் ஹயக்கிரீவன் என்ற அசுரன் சிருஷ்டித் தொழிலை நிறுத்துவதற்காகப் பிரமதேவரிடம் இருந்து வேதங்களை அபகரித்துக்கொண்டுபோய்க் கடலுக்கு அடியில் ஒழித்து வைத்து விட்டான். விஷ்ணு ஒரு மீன் வடிவில் கடலுக்கடியில் சென்று அவனைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்று வேதங்களை மீட்டு வந்தார். இவ் அவதாரமே முதலாவது அவதாரமாகக் கருதப்படுகிறது.

**2.கூர்மம்**



தேரவர்கள் அசுரர்களோடு இணைந்து பாற்கடலைக் கடைந்த பொழுது மத்தாகப் பயன்படுத்திய மந்தரமலை கடலுக்குள் அமிழத் தொடங்கியது. அவ்வேளையில் விஷ்ணு ஆமை வடிவம் எடுத்து அந்த மலையைத் தாங்கி நின்றார்.



**3. வராகம்**

ஹிரண்யாக்ஷன் என்ற அசுரன் பூமியைப் பாயாகச் சுருட்டிப் பாதாள லோகத்தில் மறைத்து வைத்துவிட்ட நேரத்தில் விஷ்ணு பன்றி வடிவம் எடுத்துப் பாதாளலோகம் சென்று அவனைக் கொன்று பூமியை மீட்டெடுத்து வந்தார்.

**4. நரசிம்மம்**



இரணியன் என்ற கொடிய அசுரனை அழித்துப் பிரபஞ்சமெங்கும் தாம் வியாபித்திருப்பவன் என்ற உண்மையை உலகுக்கு உணர்த்துவதற்காக இரணியனுடைய மகன் பிரகலாதனுடைய வேண்டுகோளுக்கிணங்க நரசிம்ம வடிவத்தை விஷ்ணு எடுத்துக் கொண்டார். இவ் வடிவம் சிங்கமும் மனிதனும் இணைந்த வடிவமாகும். தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்ற வார்த்தையை நிரூபிக்கத் தூணில் வெளிப்பட்டு இரணியனைக் கொன்று பிரகலாதனுக்கு அருள் புரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### 5.வாமனர்

குறள் வடிவமாக, ஓர் அந்தணப் பிரமச்சாரியாகத் தோன்றிய விஷ்ணு மாபலிச் சக்கரவத்தி என்னும் கொடிய அசுரன் யாகம் செய்த வேளையில் அங்கு வந்து மூன்றடி மண் தானமாகக் கேட்கிறார். பின்னர் விஸ்வரூப வடிவம் எடுத்து ஓரடியால் இவ்வுலகையும், மற்றோர் அடியால் விண்ணுலகையும் அளந்த பின் மூன்றாவது அடிக்கு இடம் இல்லாத படியால் மபாலியின் தலையில் காலை வைத்து அழுத்தி அவனைப் பாதாளத்துள் அமிழ்த்தினார். மூன்றடி அளந்த இவ்வடிவம் திரிவிக்கிரம வடிவம் எனப்படும். இத் திரிவிக்கிரம வடிவம் பற்றி இருக்கு வேதத்திலே கூறப்படுகிறது. (ஈரடியால் மூவுலகு அளந்தோன்)



### 6. பரசுராமர்

பரசு என்பது கோடரியைக் குறிக்கும். கோடரியை ஆயுதமாகக் கொண்டு 21 தலைமுறைகளுக்கு க்ஷத்திரிய வம்சத்தை அழிப்பதாகச் சபதம் எடுத்தவர் தவவலிமை மிக்க பரசுராமர். தவறாக நடக்கின்ற அரசர்களின் செருக்கை அடக்குவதற்கு இந்த அவதாரம் துணை செய்கிறது.



### 7. தசரதராமர்

ஏகபத்தினி விரதனாகவும் மனிதவிழுமியங்களின் ஒட்டுமொத்த வடிவமாகவும் மக்களுக்கு வாழ்ந்து காட்டிய ஓர் அவதாரம் இராம அவதாரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரியோர்களை மதித்தல், தந்தை சொற்பேணல், குருவைப் போற்றுதல், நாட்டு மக்களை நன்கு பேணுதல் முதலிய நற்குணங்களின் இருப்பிடமாக இவ்வவதாரம் பொலிகிறது.

### 8. பலராமர்

கிருஷ்ண அவதாரத்தோடு இணைந்த இன்னோர் அவதாரமாகிய பலராமர் கிருஷ்ணவதாரத்தின் நோக்கம் நிறைவு பெறுவதற்குப் பல வழிகளிலும் உதவி செய்திருக்கிறார். கலப்பையை ஆயுதமாகக் கொண்ட இவர் உழவுத் தொழிலின் மகிமையைப் புலப்படுத்திய வராகவும் காணப்படுகிறார்.

பலராமர் ஆதிசேடனுடைய அவதாரம் என்ற கருத்தும் நிலவுகின்றது. பலராமரைத் தசாவதாரத்தில் ஒன்றாக எடுக்காமல் புத்தரை அந்த இடத்தில் கூறுவதும் உண்டு.



### 9.கிருஷ்ணர்

அவதாரங்களின் நிறைந்த வடிவமாகப் போற்றப்படும் கிருஷ்ணர் தெய்வீக நிலை பொருந்தியவர். பகவத்கீதையை அருச்சுனனுக்கு உபதேசிப்பதன் மூலம் சமயதத்துவ உண்மைகளை உலகியல் வாழ்க்கைக்கு எடுத்து வந்த பெருமை இந்த அவதாரத்திற்கு உண்டு.

துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் (தீயோரை அழித்து நல்லோரைக் காத்தல்) என்பது இவ் அவதாரத்தின் நோக்கமாகும்.

### 10.கல்கி

இந்த அவதாரம் இன்னும் நிகழவில்லை. இனிமேல் நிகழும் என நம்பப்படுகிறது. வெள்ளைக்குதிரை மீதேறி வாளேந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீரராகக் கலியுக முடிவில் இவர் வருவார் எனக் கூறப்படுகிறது.

அவதாரத்தின் நோக்கம் கீதையில் கண்ணனால் தெளிவுறுத்தப்படுகிறது.

"எப்பொழுதெல்லாம் தர்மம் அழிந்து அதர்மம் தலை தூக்குகிறதோ அப்பொழுதெல்லாம் நல்லோரைக் காக்கவும் தீயோரை அழிக்கவும் நான் பிறவி எடுக்கின்றேன்."

## அவதார தத்துவத்தின் அறிவியல் நோக்கு

அவதாரங்கள் பத்தையும் நோக்குகின்றபோது விஞ்ஞான ரீதியில் அமைந்த கூர்ப்புத் தத்துவம் என்னும் பரிணாமக் கோட்பாட்டை அது வலியுறுத்துவதாகக் காணலாம். உயிரினங்கள் நீரிலேயே தோற்றம் பெற்றுப் பின்னர் படிப்படியாக நில்த்தில் வாழப்பழகி ஊர்வன மிருகமாக மாறிப் பின் மனிதஉயிர் தோன்றியது என்பதே பரிணாமக் கோட்பாடு.

முதலில் நீரில் வாழும் மீன்வடிவமும் பின்னர் நீரிலும் நிலத்திலும் வாழும் ஆமை வடிவமும் அதன்பின் நிலத்தில் வாழும் மிருகமாகிய பன்றிவடிவமும் தொடர்ந்து மிருகமும் மனிதனும் இணைந்த வடிவமாகிய நரசிம்ம வடிவமும் அதன்பின் குள்ளமான மனிதவடிவமாகிய வாமனத் தோற்றமும் கோபம் முதலிய குறைபாடுகள் நிறைந்த பரசுராம வடிவமும் நற்குணம் வாய்ந்த முழுமனித வடிவங்களான தசரதராம, பலராம அவதாரங்களும் தெய்வாம்சம் பொருந்திய கிருஷ்ணர் அவதாரமும் பரிணாமப் படிமுறை வளர்ச்சியைக் காட்டுகின்றன அல்லவா?

பூமாதேவி விஷ்ணுவின் சக்தி. அவள்தான் நம்மையெல்லாம் தாங்கிநிற்கிறாள். பூபாரம் தீர்ப்பதற்காக அவ்வப்போது தர்மத்தின்பேரால் தீயவர்களை அழித்துப் பூமாதேவியின் பாரத்தை நாராயணன் தீர்க்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைஷ்ணவ விரதங்களும் விழாக்களும்

## ஏகாதசிவிரதம்

வைஷ்ணவ விரதங்களுள் மிக விசேஷமான இவ்விரதத்தை ஆறுவயயது முதல் அறுபது வயதுவரையிலான சகலரும் கடைப்பிடிக்க வேண்டுமென்பது பகவான் கட்டளையென்று வைஷ்ணவர்கள் கூறுவர். இதனை எட்டு வயதிலிருந்து எண்பது வயது வரை என்று சிலர் சொல்லுவர்.

கங்கையைவிடச் சிறந்த தீர்த்தமில்லை. விஷ்ணுவை விட உயர்ந்த தேவரில்லை. தாயிற்சிறந்த கோயிலுமில்லை. காயத்திரியைவிட உயர்ந்த மந்திரமில்லை. **ஏகாதசியை விடச் சிறந்த விரதம் இல்லை.** என்று வைஷ்ணவ புராணங்கள் உரைக்கின்றன.

சைவமயிகளான நமக்கு இவ்வார்த்தைகள் முரண்பாடாகத் தோன்றினாலும் சிறந்த சிவபக்தனாகிய விஷ்ணுவை வழிபடுவதும் விரதம் அனுஷ்டிப்பதும் சிவாபராதமாகாது என எண்ணித் துணியலாம்.

விஷ்ணுவின் அவதார மகிமைகளைச் சிறப்பித்துக்கூறும் இதிகாசங்களில்கூட சிவனின் பெருமையும் சிவவிரதங்களின் சிறப்பும் கூறப்படுவது கவனிக்கத்தக்கது. மஹாவிஷ்ணு சிவபெருமானைச் சஹஸ்ர நாமங்களால் (ஆயிரம் நாமம்) அர்ச்சிக்கும்போது ஒருமலர் குறைவுபடுவது கண்டு தமது கண்களுள் ஒன்றைச் சமர்ப்பித்து அர்ச்சனையை நிறைவு செய்தவர் என்று புராணங்கள் புகழும். இதனால் விஷ்ணுவுக்குக் கமலக்கண்ணன் என்று பெயர்.

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார்தாம் வருவார்" என்ற சிவஞான சித்தியார் வாக்குக்கிணங்க மதப்பூசல்களைக் கடந்து பக்தி மார்க்கமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடியற்றி விரதங்கள் பேணும் நமக்கு இப்பேதங்கள் ஏது? மேலும், ஏகாதசித்திதி சிவனுக்குரியதென்றும் துவாதசித்திதி விஷ்ணுவுக்குரியதென்றும் சொல்லப்படும் வழக்கமுமுண்டு. திரயோதசித் திதியில் வரும் பிரதோஷகாலம் சிவனுக்குரியதென்பதும் தெரிந்ததே.

ஏகாதசி விரதத்தைப் பற்றிப் பவிஷ்யோத்தர புராணத்திலும், பத்மபுராணத்திலும் விபரிக்கப்பட்டுள்ளது. ஏகாதசிப் புராணம் என்று தனியே ஒரு புராணமும் இயற்றப்பட்டுள்ளது. இதனை இயற்றியவர் யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் வரதராஜ பண்டிதராவார்.

ஒவ்வொரு பட்சத்துக்கு ஒவ்வொரு ஏகாதசியாக, அதாவது அமாவாசைக்குப் பின்வரும் பதினோராம் நாள், பௌர்ணமிக்குப் பின்வரும் பதினோராம் நாள் என இரு ஏகாதசிகள் ஒரு மாதத்தில் வரும். இதைவிட மேலதிகமாக வருகின்ற ஒரு ஏகாதசியையும் சேர்த்து ஒரு வருடத்தில் இருபத்தைந்து ஏகாதசி விரத நாட்கள் வருகின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெயர் உண்டு.

1. உற்பத்தி ஏகாதசி - மார்கழித் தேய்பிறை
2. மோக்ஷ ஏகாதசி - மார்கழி வளர்பிறை
(பெரிய ஏகாதசி, சுவர்க்கவாசல் ஏகாதசி, வைகுண்ட ஏகாதசி)
3. ஸபலா - தைமாதத் தேய்பிறை
4. புத்ரதா - தைமாத வளர்பிறை
5. ஷட்திலா - மாசித் தேய்பிறை
6. ஜயா - மாசி வளர்பிறை
7. விஜய - பங்குனித் துய்பிறை
8. ஆமலகீ - பங்குனி வளர்பிறை
9. பாப மோசனிகா - சித்திரைத் தேய்பிறை
10. காமதா - சித்திரை வளர்பிறை
11. வரூதினீ - வைகாசித் தேய்பிறை
12. மோகினி - வைகாசி வளர்பிறை
13. அபரா - ஆனித்தேய்பிறை
14. நிர்ஜலா - ஆனி வளர்பிறை
15. யோகிநீ - ஆடித்தேய்பிறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. சயினீ - ஆடி வளர்பிறை
17. காமிகா - ஆவணித் தேய்பிறை
18. புத்ரதா - ஆவணி வளர்பிறை
19. அஜா - புரட்டாதித் தேய்பிறை
20. பத்மநாபா - புரட்டாதி வளர்பிறை
21. இந்திரா - ஐப்பசித் தேய்பிறை
22. பாபாங்குசா - ஐப்பசி வளர்பிறை
23. ரமா - கார்த்திகைத் தேய்பிறை
24. பிரபோதினி - கார்த்திகை வளர்பிறை
25. கமலா - மேலதிக ஏகாதசி

மேலதிக ஏகாதசி வரும் மாதம் **புருஷோத்தம மாதம்** எனப்படும்.

மார்கழி மாத வளர்பிறை ஏகாதசியே இவற்றுள் விசேஷமானது. இதனால் இது மோக்ஷ ஏகாதசி, வைகுண்ட ஏகாதசி, பெரியஏகாதசி என்ற பெயர்களால் குறிக்கப்படுகிறது. ஏகாதசி விரதமநுஷ்டிக்க விரும்புவோர் இந்த வைகுண்ட ஏகாதசியில்தான் விரதத்தை ஆரம்பிக்க வேண்டும். மாதங்களுள் நான் மார்கழியாக இருக்கிறேன் என்று கண்ணன் கீதையில் கூறியிருக்கிறார். இம்மாதம் மஹாவிஷ்ணுவுக்குப் பிரீதியானது. மார்கழி மாத ஞாயிற்றுக்கிழமைகளும் மிக விசேஷமான தினங்களாகும். வைஷ்ணவத் தலங்களில் அடியார்கள் கூடி விசேஷ வழிபாடுகளை நிகழ்த்துவர்.

ஏகாதசி உற்பத்தியாகியது மார்கழி மாதத் தேய்பிறை ஏகாதசியில்தான். இதனால் தான் அதனை உற்பத்தி ஏகாதசி என்கிறார்கள். ஆனால் வளர்பிறை ஏகாதசியின் சிறப்பினால் அதையே வைகுண்ட ஏகாதசி என்று சிறப்பிப்பதுடன் விரத ஆரம்பத்துக்குக் கொள்கின்றனர். இந்த விபரங்கள் பத்ம புராணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஏகாதசி விரத நாளில் தசமித் திதியின் சம்பந்தம் இருக்கக்கூடாது. தசமியிருந்தால் மறுநாள் துவாதசியில் விரதமிருந்து திரயோதசியில் பாரணை செய்யலாம். காலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதசியும் நடுவில் துவாதசியும் இறுதியில் திரயோதசியும் இருப்பின் அது அதிவிஷேசமானது. இவ்வாறு ஏகாதசி தினத்தன்று காலையில் தசமியிருந்தால் அத்தினத்தை ஸ்மார்த்த ஏகாதசி எனவும் மறுநாளை வைஷ்ணவ ஏகாதசி எனவும் கூறுவர். ஏகாதசி விரதமநுஷ்டிப்போர் இவ்விருநாளில் வைஷ்ணவ ஏகாதசியையே கொள்ள வேண்டும். பிதிர்காரியம் முதலிய வேறு தேவைகளுக்கு ஸ்மார்த்த ஏகாதசியைக் கொள்ளலாம்.

ஏகாதசி விரதம் கிருஷ்ணபரமாத்மாவினால் அர்ஜுனனுக்கு உபதேசிக்கப்பட்ட பெருமையுடையது. ஆயுள்விருத்தியையும் ஆரோக்கியத்தையும் போக மோக்ஷங்களையும் தருவது இவ்விரதம். இதனையநுஷ்டிப்போர் நோய், வறுமை முதலியன நீங்கி வீரமும், செல்வமும், கல்வியும் பெற்று இகபரசுகமடைவர்.

முன்னர் முரன் என்ற அசுரன் தான்பெற்ற வரபலங்களினால் யாராலும் வெல்லப்படாமல் தருக்கித் திரிந்தான். இவனால் ஏற்பட்ட துன்பங்களைத் தாங்கவியலாமல் யாவரும் மஹாவிஷ்ணுவிடம் முறையிட்டனர். பாம்பணையில் அறிதுயில் கொண்டிருந்த மஹாவிஷ்ணுவின் தேதக்திலிருந்து அவரது அபூர்வ சக்தயானது பெண்ணுருவில் வெளிப்பட்டு வந்து அசுரனுடன் போரிட்டு அவனை அழித்தது. தேவர்கள் யாவரும் அந்த சக்தியை வழிபட்டு நின்றனர்.

தன்னை ஏகாதசீதேவியென்று அறிமுகம் செய்த அந்த சக்தி, தன்னை நினைத்துத் தனது திதியாகிய ஏகாதசியில் விரதமிருந்தால் எல்லா நலன்களும் கிடைக்கும் எனக் கூறி மறைந்தாள்.

கைடபதேசத்தில் கர்ணீகநகரில் முன்பொரு சமயம் வறுமையால் வருந்திய ஒரு பிராமணத் தம்பதியருக்கு நாரதர் இந்த விரதத்தை உபதேசித்தார். அவர்களும் இந்த விரதத்தை முறைப்படி அநுஷ்டித்து சகல செல்வமும் பெற்று வாழ்ந்து முக்தியடைந்தனர். அதன்பின் இது பூமியில் நல்லோர் பலரால் அநுஷ்டித்து வரப்படுகிறது. ருக்மாங்கதன், அம்பரீஷன் முதலியோரும் இவ்விரதமிருந்து பலனடைந்தவர்களாவர்.

முன்னரே குறிப்பிட்டபடி மார்கழி மாதத்து வளர்பிறையில் வரும் வைகுண்ட ஏகாதசியில் இவ்விரதத்தை ஆரம்பிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரத நாளுக்கு முதல் நாளிலேயே ஒரு நேர உணவும் இந்திரிய நிக்ரகமும் (குடும்ப உறவு நீக்கம்) கடைப்பிடிக்க வேண்டும். (பொதுவாக உபவாச விரதங்கள் யாவற்றுக்கும் இவ்விதி பொருந்தும்) ஏகாதசியன்று முழுப் பட்டினியாக உபவாசமிருந்து இரவு முழுவதும் நித்திரை விழிக்க வேண்டும். பாகவத புராணங்களைப் படித்தலும் கேட்டலும் பகவானின் நாமஜெபம், நாமபஜனை இவற்றில் ஈடுபடுவதும் இத்தினம் முழுவதும் செய்யவேண்டிய காரியங்களாகும்.

வீட்டிலே பூஜைவழிபாடு செய்ய விரும்புவோர் முறைப்படி தானியங்களின் மேல் பத்மம் வரைந்து சந்தன பிம்பத்தில் பூமிதேவி நீலாதேவி சஹித மஹாவிஷ்ணுவை விரதசங்கல்பத்துடனும், பூர்வாங்க பூஜைகளுடனும் ஆவாகனம் செய்து பூஜை செய்யலாம். பூஜைக்கு வேண்டிய துளசியை முதல்நாளே எடுத்து வைக்கவேண்டும். ஏகாதசி நாளில் துளசி எடுத்தலாகாது. அவசியமேற்படின் இரண்டு இலைகளும், கதிருமாக எடுக்கலாம். (விதிவிலக்கு).

மறுநாட்காலை எட்டரை மணிக்குமுன் பாரணை செய்தல் முறை பாரணையின் போது துளசியிலை அகத்திக் கீரை நெல்லிக்காய் முதலியவற்றை சேர்த்துக் கொள்வது நல்லது.

ஏகாதசியன்று தாம் உபவாசமிருந்தல் வேண்டும் என்பதோடு வீட்டுக்கு வரும் விருந்தாளிக்கு விருந்தளித்தல் தவிர்க்கப்படுவதும் வேண்டும். பலர் ஏகாதசி நாளில் வீட்டில் சமையல் செய்வதேயில்லை.

இவ்விரதம் ஒரு வருடகாலம் கைக்கொள்ளப்பட வேண்டும். வருட முடிவில் விரதோத்யாபனம் செய்ய வேண்டும். தொடர்ந்து விரதமநுஷ்டிக்க விரும்புவோர் ஒவ்வொரு வருட முடிவிலும் விரத பூர்த்தி செய்வது நன்று. ஒருவருடத்தில் வரும் வளர்பிறை ஏகாதசிகளை மட்டும் அநுஷ்டிக்கும் வழக்கமும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிருஷ்ண ஜெயந்தி (கோகுலாஷ்டமி)

ஸ்ரீஜயந்தி, கிருஷ்ண ஜெயந்தி, கோகுலாஷ்டமி, ஜன்மாஷ்டமி என்று பல பெயர்களால் குறிக்கப்படும் இந்த விரதமானது ஸ்ரீகிருஷ்ணனின் பிறந்தநாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. கம்சன் என்ற கொடிய அசுரனைக் கொன்றொழிப்பதற்காகவும் பூபாரம் குறைப்பதற்காகவும் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்வதற்காகவும் பார்த்தனுக்குச் சாரதியாக வந்து பகவத் கீதையை உலகுக்கு வழங்கவும் கிருஷ்ணாவதாரம் நிகழ்ந்தது.

ஆவணி மாதத்துக் கிருஷ்ணபட்ச அட்டமித் திதியும் ரோகிணி நட்சத்திரமும் சேர்ந்துவரும் இரவுப் பொழுது ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியாகும். சப்தமியுடன்கூடிய அட்டமியும் கார்த்திகையோடு கூடிய ரோகிணியும் இவ்விரதத்துக்கு விலக்கப்பட்டவை. கார்த்திகை சேராத ரோகிணியே முக்கியமாகக்கவனிக்கப்படும்.

நாரதமுனிவருக்கு பிரம்மதேவராலும் அரிச்சந்திரனுக்கு சனற்குமார முனிவராலும் உபதேசிக்கப்பட்ட இவ்விரதத்தை அம்பரீசன், சிசுபாலன், காதிராஜன் முதலிய மன்னர்களும் வசிட்டர், வால்மீகி, வாலகில்யர், கௌதமர், கார்க்கியர், ஜமதக்னி முதலிய முனிவர்களும் அநுட்டித்துப் பயன்பெற்றனர்.

இல்லங்களைத் தூய்மையாக்கி அலங்கரித்து வாசற்படியிலிருந்து சுவாமியறை வரை குழந்தையின் காலடி அடையாளங்களைக் கோலமிட்டுவைப்பர். பகல்முழுதும் உபவாசமும் இரவு நித்திரைவிழிப்பும் மறுநாள் உதயத்தில் பாரணையும் செல்லப்பட்டிருக்கின்றன. இயலாதவர்கள் ஒருபொழுது உணவுண்டு விரதமநுட்டிப்பர்.

தேவகி, வசுதேவர் சகிதமாகக் கிருஷ்ணனுக்குக் கும்பம் வைத்துப் பூஜைகள் செய்யலாம். பகவத்கீதை பாராயணம் செய்தல் நன்று. நாவற்பழமும் வெள்ளரிப் பிஞ்சும் விசேட நிவேதனங்கள். இவற்றோடு கண்ணனுக்குப் பிரியமான அவல், பால்பாயசம், வெண்ணெய், தயிர் முதலியனவும் படைத்து வழிபடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்திய நாராயண விரதம்

சூதபுராணிகர் சௌனகாதி முனிவர்களுக்குக் கூறிய விரதங்களுள் சத்திய நாராயண விரதமும் ஒன்று. நாரதமுனிவருக்கு மஹாவிஷ்ணுவால் உபதேசிக்கப்பட்ட பெருமையுடையது இது. சகல சௌபாக்கியம், சந்தான விருத்தி, மனச்சாந்தி முதலியவற்றை வழங்கும் இவ்விரதம் எந்த மாதத்திலாவது பௌர்ணமி, அமாவாசை, அட்டமி, துவாதசி ஆகிய திதிகள் ஞாயிறு, திங்கள், வெள்ளி ஆகிய கிழமைகள் மாதப்பிறப்பு ஆகியவற்றில் ஏதாவதொரு தினத்தில் கைக்கொள்ளப்படலாம்.

பாரதத்தில் பெரும்பாலும் தீபாவளித் திருநாளில் சத்ய நாராயண மூர்த்தி ஆகிய மஹாவிஷ்ணுவுக்குப் பூஜை நடத்தி விரதமிருக்கின்றனர்.

## அனந்த பத்மநாப விரதம்

வறுமை நீங்கிச் செல்வம் பெறுவதற்காக புரட்டாதி மாத வளர்பிறைச் சதுர்த்தசித் தினத்தன்று பூஜைவழிபாடுகளுடன் இந்த விரதமிருப்பர். பதினான்கு முடிச்சுக்களுடன் காப்புக்கட்டுதல் முக்கிய அம்சம். பதினான்கு வருடம் இவ்விரதம் அநுட்டிக்கவேண்டும்.

மஹாவிஷ்ணு அநந்த வடிவில் இப்பூமியைத் தாங்குவதுபற்றிக் குறிப்பிடும் விரதமென்பதால் தர்ப்பையினால் ஐந்து முடிச்சுக்களுடன் (ஐந்து தலை) அநந்தனாகப் பாவித்துக் கலசத்தின்மீது வைத்துப் பூஜிக்கப்படும்.

## ஸ்ரீராமநவமி

சித்திரைமாதப் பூர்வபட்ச நவமித்திதியானது ராமநவமி எனப்படும். ஸ்ரீராமபிரானின் ஜனன தினம் இதுவாகும். இத்தினத்தில் ராமருடைய உருவத்திலோ, படத்திலோ, கும்பத்திலோ ஆவாஹனம் செய்து பூசித்து வழிபடலாம். விஷ்ணு ஆலயங்களில் இது ஒரு விழாவாகவே கொண்டாடப்படுகிறது. சகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபங்களையும் போக்கி முத்தியளிக்கும் இந்த விரதம் அகத்திய முனிவரினால் ஸுதீஷ்ண முனிவருக்கு உபதேசிக்கப்பட்டது.

## அமாவாஸ்யா சோமவார விரதம்

பவிஷ்யோத்தர புராணத்தில் சிறப்பித்துச் சொல்லப்பட்ட இந்தவிரதம் சந்தான விருத்தியைத் தரவல்லது. அமாவாசையும் திங்கட்கிழமையும் சேர்ந்துவரும் நாள் எந்த மாதத்திலாவது வருமானால் அத்தினத்தில் இவ்விரதம் கைக்கொள்ளப்படலாம். பீஷ்மர் தருமருக்கு உபதேசித்து அவர்கள் இவ்விரத மகிமையால் குழந்தைப்பேறு பெற்றனர். ஓர் அரசமரத்தடியைச் சுத்தப்படுத்தி நீர்தெளித்துக் கோலம் இட்டு பூஜைக்குரிய பொருட்களைச் சேகரித்துவைத்துக்கொண்டு அரசமரத்தை மஹாவிஷ்ணுவாகப் பாவித்துப் பூஜை செய்யவேண்டும். அரசமரம் மும்மூர்த்தி வடிவம்.

அரசமரத்தை 108 தடவை பிரதட்சணம் செய்து ஒவ்வொரு தடவையும் ஒவ்வொன்றாக இரத்தினம், பொன், பழவகை, பூக்கள், படசணம் இவற்றிலொன்றை மரத்தினடியில் சமர்ப்பிக்கவேண்டும். இப்பொருட்களை பூஜை செய்வித்த அர்ச்சகருக்கு அல்லது பொருத்தமான ஒருவருக்கு வழங்கவேண்டும்.

## மத்தன துவாதசீ விரதம்(துளசி விரதம்)

பிரம்மதேவன் சரஸ்வதிக்கு உபதேசித்த துளசீதேவி விரதம் இது. ஐப்பசி மாத வளர்பிறை ஏகாதசியிலிருந்து கார்த்திகைமாத வளர்பிறை ஏகாதசிவரையான ஒருமாதகாலம் இவ்விரதம் கைக்கொள்ளப்படுகிறது. ஆரம்பநாள், இறுதிநாள் ஆகிய இரண்டு ஏகாதசி நாள்களும் உபவாசம் இருக்கவேண்டும். ஏனைய நாட்களில் ஒருநேர உணவு கொள்ளலாம். சகலசம்பத்தும் புத்திரலாபமும் தரவல்ல இவ்விரதத்தைப் பெரிதும் பெண்களே அநுஷ்டிப்பர்.

தினமும் துளசிமாடத்தின்முன் ஐந்து வர்ணங்களில் கமலக் கோலங்கள் அமைத்து அதில் ஐந்து தீபங்களை ஏற்றிவைக்கவேண்டும். ஐந்துவகை நைவேத்தியம், வெற்றிலை, பாக்கு, பழம் என்பன வைத்து பூஜை வழிபாடுகள் செய்து பிரதட்சணம் செய்து பிரார்த்திக்கவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை ஏகாதசியில் இறுதிநாள் பூஜை முடித்து மறுநாள் அரிசிமாவில் சர்க்கரைப் பாகு சேர்த்துப் பிசைந்து மூன்று உருண்டைகளாக உருட்டி அவற்றை நிவேதனம் செய்து வழிபடவேண்டும்.

ஐந்து வருடங்கள் இவ்விரதம் அநுட்டித்தபின் உத்தியாபனம் செய்யலாம்.

## வரலக்ஷ்மி விரதம்

பவிஷ்யோத்தர புராணத்தில் சிறப்பித்துக் கூறப்படும் வரலஞ்மி விரதம் ஆவணிமாத பௌர்ணமிக்கு முந்திய வெள்ளிக் கிழமையில் கைக்கொள்ளப்படுகிறது. சகல செல்வ போகங்களையும் தரவல்ல இந்த விரதநாளில் அரிசியால் நிரப்பப்பட்ட கும்பத்திலே லக்ஷ்மியை ஆவாஹனம் செய்து பூஜிப்பர். ஒன்பது முடிச்சுக்கள் உள்ள நூற்சரட்டிலே ஒன்பது நாமங்களால் அர்ச்சித்தபின் அதனை வலது கையிலே கட்டிக்கொள்ளவேண்டும். விசேட நைவேத்தியம் நெய்ச்சாதம். விசேட அர்ச்சனைப் பொருள் அறுகு. ஒன்பது வருடங்கள் இது அநுட்டிக்கப்படவேண்டும்.

## ஆடிப்பூரம்

ஆண்டாளின் பிறந்த தினமான இத்தினத்திலே பூரகர்மம் என்னும் ருதுசாந்தி வைபவமும் சில இடங்களிலே மாங்கல்ய தாரணமும் நடைபெறுகிறது.

## புரட்டாதிமாதத் திருவோணத் தீபம்

விஷ்ணுவின் நட்சத்திரம் திருவோணம்.புரட்டாதிமாதம் விஷ்ணுவுக்குரியது. விஷ்ணுவுக்கும் புதனுக்கும் தொடர்பு உண்டு. புதன் கிரகத்துக்கு அதிதேவதையும் பிரத்யதிதேவதையும் விஷ்ணுவும் நாராயணனும். புதன்கிரகத்துக்குரிய ராசி கன்னி. அதனால் கன்னிமாதமாகிய புரட்டாதியில்தான் விஷ்ணுவுக்கு மஹோற்சவம் முதலிய சிறப்புக்கள் பெரிதும் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாதத்தில் வருகின்ற திருவோண நட்சத்திரத்திலே எம்பெருமானுக்கு நெய்த்தீபமேற்றி விழாக் கொண்டாடுவது மரபு.

## தீபாவளித்திருநாள்

நரகாசுரனை மஹாவிஷ்ணு சத்யபாமாவின் துணையோடு கொன்றொழித்து மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்த நாள் என்பதால் பண்டிகைக் காலமாகிய தீபாவளி வைஷ்ணவர்களுக்குத் தனிச்சிறப்பான ஒரு நாளாகும்.

## தநுர்மாச பூஜையும் அத்யயனோற்சவமும்.

தநுர்மாதம் எனப்படும் மார்கழி மாதம் தேவர்களின் வைகறைப் பொழுது. "மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்" என்று கீதையில் கண்ணன் கூறியிருப்பதால் விஷ்ணுவுக்கு அதிசிறப்பான மாதம் இது. இம்மாதம் முழுவதும் திருப்பாவைக்குரியது. முதல்நாள் முதலாம் பாடல் இரண்டாம் நாள் முதலிரு பாடல்கள் என்றிவ்வாறு முப்பதாம் நாள் முப்பது பாடல்களையும் பாடுவது மரபு.

தமிழ்வேதமாகிய நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கு வேதங்களுக்குச் சமமான இடம் கொடுத்து வைகுண்ட ஏகாதசிக்குப்பின் பத்து நாட்களுக்கு அதனை ஓதித் திருவாய்மொழிக்கு ஒரு திருவிழா நடைபெறுகிறது. இது அத்யயனோற்சவம் எனப்படும். இராமானுஜரால் ஸ்ரீரங்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட இவ்விழா பல்வேறு திவ்யதேசங்களிலும் இன்று நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைஷ்ணவ ஞானிகளும் அடியார்களும்



வைஷ்ணவ சம்பிரதாயத்திலே சமய தத்துவ சிந்தனைகளை வளர்த்து வழிகாட்டி நின்ற குருபரம்பரை ஒன்றுண்டு. சைவ சமயத்திலே சதாசிவர், அநந்தர், ஸ்ரீகண்டர், அம்பிகை, குஹர், விஷ்ணு, பிரம்மா என எழுவரை சப்தகுரு எனப் போற்றுவர். இதேபோல ஸ்ரீமந் நாராயணனில் ஆரம்பித்து இந்த வைஷ்ணவ குருபரம்பரை வளர்கிறது.

## ஆசார்யப் பிரபாவம் (குரு பரம்பரை)

ஸ்ரீமந் நாராயணன்
பெரிய பிராட்டி
விஷ்வக்சேனர்
நம்மாழ்வார்
நாதமுனிகள்
உய்யக்கொண்டார்
மணக்கால் நம்பி
ஆளவந்தார்

**ஸ்ரீ நாதமுனி,**
**ஸ்ரீ யாமுனமுனி (ஆளவந்தார்)**
**ஸ்ரீ ராமாநுஜமுனி**
**ஆகிய மூவரையும் முதன்மைப்படுத்தி முனித்திரய பரம்பரை என இப்பரம்பரையைக் குறிப்பிடுவர்.**

திருக்கோஷ்டியூர் நம்பி, திருமலையாண்டான், பெரிய நம்பி, பெரிய திருமலை நம்பி, திருவரங்கப் பெருமாளரையர்

**ராமாநுஜர்**

கூரத்தாழ்வார், எம்பார், முதலியாண்டான், நடாதுரம்மாள்

பட்டர்
நஞ்ஜீயர்
நம்பிள்ளை
வடக்குவீதிப்பிள்ள
பிள்ளைலோகாசாரியார்
திருவாய்மொழிப்பிள்ளை
மணவாளமாமுனிகள்

கிட்டாம்பி அப்புள்ளார்
**வேதாந்த தேசிகர்**
பெரியவாச்சான்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைஷ்ணவத் திருமடங்கள்

| வடகலை | தென்கலை |
| --- | --- |
| அகோபிலமடம் | வானமாமலை மடம் |
| ஸ்ரீ ஆண்டவன் ஆசிரமம் | பெரிய ஜீயர் மடம் |
| பரகால மடம் | சின்ன ஜீயர் மதம் |
| | ராமாநுஜ ஜீயர் மடம் |
| | முதலியாண்டான் திருமாளிகை |



வடகலை,
தென்கலை வேறுபாடு



வைஷ்ணவ மரபிலே இருவகை நெறிமுறைகள் உள்ளன.

ஸ்ரீபாஷ்யத்தையும் வடமொழிநூல்களையும் முக்கிய பிரமாணங்களாக ஏற்றுக்கொண்டு வைதிக கர்மாக்களுக்கு முதலிடம் கொடுத்துவருபவர்கள் வடகலையார். இவர்கள் வேதாந்த தேசிகரைப் பின்பற்றுகின்றனர்.

ஸ்ரீபாஷ்யத்தையும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களையும் முக்கிய பிரமாணங்களாக ஏற்றுக்கொண்டு பக்திக்கும் பாகவத கைங்கர்யத்திற்கும் முதலிடம் கொடுத்துவருபவர்கள் தென்கலையார். இவர்கள் இராமானுஜாசாரியாரைப் பின்பற்றுகின்றனர்.

வேத கட்டளைகளின்படி அனைத்துக் கர்மாக்களையும் நிறைவேற்றுவதோடு நமது முத்திக்காக நாமே முயற்சி செய்யவேண்டும் என்பது வடகலை.

பலாபலன்களை எதிர்பாராமல் கட்டாயம் செய்யவேண்டிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதக் கடமைகளை மட்டும் செய்வதோடு, இறைவனை முழுமையாகச் சரணடைந்து, அவனே அருள்செய்வான் என்ற நம்பிக்கையுடன் தொழுவது அவசியம் என்பது தென்கலை.

இலக்குமிக்கு முத்திவழங்கும் அதிகாரமும் முத்தொழில் அதிகாரமும் உண்டெனக் கொள்வது வடகலை.

'புருஷகாரம்' என்ற சிபார்சு செய்யும் அதிகாரம் மட்டுமே இலக்குமிக்கு உண்டு என்பது தென்கலை.

வர்ணாசிரம தர்மங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது வடகலை.

அவனடியார்களில் அவர், இவர் எனப் பாகுபாடு பாராதிருப்பது தென்கலை.

புருவமத்தியில் வளைந்து துவங்கும் வெள்ளைத் திருமண்ணை நெற்றியில் இட்டு அதனிடையில் மஞ்சள் நிறச் சூர்ணம் இடுவது வடகலை.

மூக்கு நுனியிலிருந்து துவங்கும் பத்மமுடைய வெள்ளைத் திருமண்மை நெற்றியில் இட்டு அதனிடையில் குங்குமவர்ண ஸ்ரீசூர்ணம் இடுவது தென்கலை.

ஒன்றுக்கு மேற்பட்ட முறை வீழ்ந்து வணங்குவது வடகலை.

ஒரே ஒரு தடவை வணங்குவது தென்கலை.

திருமண்குறிகள் பன்னிரண்டு இடங்களில் இட்டுக் கொண்டபின் பதின்மூன்றாவதாக உச்சியில் இட்டுக்கொள்வது வடகலை.

பன்னிரண்டுடன் நிறுத்திக்கொள்வது தென்கலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்வாராதியர்

சைவசமயத்தில் நாயன்மார்களைப்போல் வைஷ்ணவத்தில் தோத்திர இலக்கியங்களினூடாகச் சாஸ்திர மரபை வளர்த்தெடுத்தவர்கள் பன்னிரு ஆழ்வார்கள். இவர்கள் விஷ்ணுவினுடைய அம்சாவதாரங்களாவர்.

## 1. பொய்கையாழ்வார்

காஞ்சிபுரம் திருவெஃகா எனும் தலத்தில் ஒரு பொய்கையில் பொற்றாமரையிலே துவாபரயுகத்தில் சித்தாத்திரி வருடம் ஐப்பசிமாத சுக்லபக்ஷ அஷ்டமித் திதியிலே செவ்வாய்க்கிழமை திருவோண நக்ஷத்திரத்திலே திருமாலின் பாஞ்சஜன்னிய அம்சமாக இவர் அவதரித்தார்.

இயற்பாவில் முதல் திருவந்தாதி எனும் 100 பாடல் கொண்ட பகுதி இவரால் இயற்றப்பட்டதாகும்.

## 2. பூதத்தாழ்வார்

மாமல்லபுரம் மல்லிகைக் காட்டிலே ஒரு நீலோற்பல மலரில் துவாபரயுகத்தில் சித்தாத்திரி வருடம் ஐப்பசிமாத சுக்லபக்ஷ நவமித் திதியிலே புதன்கிழமை அவிட்ட நக்ஷத்திரத்திலே திருமாலின் கதாயுத அம்சமாக இவர் அவதரித்தார்.

இயற்பாவில் இரண்டாம் திருவந்தாதி எனும் 100 பாடல் கொண்ட பகுதி இவரால் இயற்றப்பட்டதாகும்.

## 3. பேயாழ்வார்

மயிலாப்பூர் ஆதிகேசவப் பெருமாள் கோயிலில் ஒரு கிணற்றில் செவ்வல்லி மலரிலே துவாபரயுகத்தில் சித்தாத்திரி வருடம் ஐப்பசிமாத சுக்லபக்ஷ தசமித் திதியிலே வியாழக்கிழமை சதய நக்ஷத்திரத்திலே திருமாலின் வாளின் அம்சமாக இவர் அவதரித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்பாவில் மூன்றாம் திருவந்தாதி எனும் 100 பாடல் கொண்ட பகுதி இவரால் இயற்றப்பட்டதாகும்.

## 4. திருமழிசை ஆழ்வார்

திருமழிசைத் தலத்தில் பார்க்கவ முனிவரின் புதல்வராக துவாபரயுகத்தில் சித்தாத்திரி வருடம் தை மாதக் கிருஷ்ண பக்ஷ பிரதமைத் திதியிலே ஞாயிற்றுக் கிழமை மக நக்ஷத்திரத்திலே திருமாலின் சங்கு அம்சமாக இவர் அவதரித்தார்.

இயற்பாவில் நான்முகன் திருவந்தாதி எனும் 90 பாடல்களுமி திருச்சந்த விருத்தம 120 பாடல்களும் இவரால் இயற்றப்பட்டவையாகும்.

## 5. நம்மாழ்வார் (சடகோபர்)

பாண்டிநாட்டில் திருக்குருகூரில் நாலாம் வருணத்தில் கலியுகத்தில் பிரமாதி வருடம் வைகாசிப் பௌர்ணமி வெள்ளிக்கிழமை விசாக நக்ஷத்திரத்திலே சேனை முதலியாரின் அம்சமாக இவர் அவதரித்தார்.

| | |
|---|---|
| திருவிருத்தம் | 100 பாடல் |
| திருவாசிரியம் | 07 பாடல் |
| பெரிய திருவந்தாதி | 87 பாடல் |
| திருவாய்மொழி | 1102 பாடல் |

என்பன இவரால் இயற்றப்பட்டவையாகும்.

## 6. மதுரகவியாழ்வார்

பாண்டிநாட்டுத் திருக்கோளூரிலே முன்குடுமிச் சோழிய அந்தண குலத்திலே கலியுகத்தில் ஈஸ்வரவருடம் சித்திரை மாத சுக்லபக்ஷ சதுர்த்தசித் திதியிலே வெள்ளிக்கிழமை சித்திரை நக்ஷத்திரத்திலே வைநதேயர் அம்சமாக இவர் அவதரித்தார்.

நம்மாழ்வார் ஆகிய தம் குருவையே இவர் பாசுரம் செய்தார். கண்ணிநுண் சிறுத்தாம்பு எனும் 11 பாடல் கொண்ட பகுதி இவரால் இயற்றப்பட்டதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. குலசேகராழ்வார்

கொல்லிநாட்டுச் சேரமன்னர் பரம்பரையிலே கலியுகத்தில் பராபவ வருடம் மாசி மாத சுக்லபக்ஷ துவாதசித் திதியிலே வெள்ளிக்கிழமை புனர்பூச நக்ஷத்திரத்திலே திருமாலின் கௌஸ்துப மணி அம்சமாக இவர் அவதரித்தார்.

முதலாயிரத்திலே உள்ள பெருமாள் திருமொழி என்னும் 105 பாசுரங்களைப் பாடியுள்ளார். இராமாவதாரம்பற்றி அதிகம் பாடியுள்ளார்.

## 8. பெரியாழ்வார்

ஸ்ரீ வில்லிபுத்தூரிலே கலியுகத்தில் குரோதன வருடம் ஆனி மாத சுக்லபக்ஷ ஏகாதசித் திதியிலே ஞாயிற்றுக்கிழமை சுவாதி நக்ஷத்திரத்திலே கருடாழ்வார் அம்சமாக இவர் அவதரித்தார். இவரது இயற்பெயர் விஷ்ணுசித்தர். இவர் பெரிதும் கிருஷ்ணாவதாரம் பற்றிய பாடல்களையே பாடியுள்ளார். வாத்சல்ய பாவத்தை அதிகம் காணலாம்.

இவர் இயற்றிய பாசுரங்கள்

| | |
|---|---|
| பெரியாழ்வார் திருமொழி | 473 பாடல்கள் |
| திருப்பல்லாண்டு | 12 பாடல்கள் |

## 9. தொண்டரடிப்பொடியாழ்வார்

சோழநாட்டுத் மண்டங்குடியிலே கலியுகத்தில் பராபவ வருடம் மார்கழி மாத கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசித் திதியிலே செவ்வாய்க்கிழமை கேட்டை நக்ஷத்திரத்திலே வனமாலையின் அம்சமாக இவர் அவதரித்தார். இயற்பெயர் விப்ர நாராயணன்.

இவர் இயற்றிய பாசுரங்கள்

| | |
|---|---|
| திருமாலை | 45 பாடல்கள் |
| திருப்பள்ளியெழுச்சி | 10 பாடல்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. திருப்பாணாழ்வார்

சோழநாட்டு உறையூரிலே கலியுகத்தில் துர்மதி வருடம் கார்த்திகை மாத கிருஷ்ணபக்ஷ துவிதீயைத் திதியிலே புதன்கிழமை ரோகிணி நக்ஷத்திரத்திலே ஸ்ரீவத்ஸ அம்சமாக இவர் அவதரித்தார். பாணரால் வளர்க்கப்பட்டதால் இப்பெயர் பெற்றார்.

இவர் இயற்றிய பாசுரங்கள்
அமலனாதிப்பிரான் 10 பாடல்கள்

## 11. திருமங்கையாழ்வார்

திருவாலி நாட்டுத் திருக்குறையலூரிலே நாலாம் வருணத்திலே கலியுகத்தில் நள வருடம் கார்த்திகை மாத பௌர்ணமித் திதியிலே வியாழக்கிழமை கார்த்திகை நக்ஷத்திரத்திலே சாரங்கமென்ற வில்லின் அம்சமாக இவர் அவதரித்தார்.

இவர் இயற்றிய பாசுரங்கள்
பெரிய திருமொழி
திருக்குறுந் தாண்டகம்
திருநெடுந் தாண்டகம்
திருவெழுகூற்றிருக்கை
பெரிய திருமடல்
சிறிய திருமடல்
— 1253 பாடல்கள்

## 12. ஸ்ரீ ஆண்டாள் (நாச்சியார், சூடிக்கொடுத்த சுடர்க்கொடி)

ஸ்ரீவில்லிபுத்தூரிலே பெரியாழ்வாரின் இல்லத்திலே திருத்துழாய்ப் பாத்தியிலே பூமாதேவியின் அம்சமாக ஆடிப்பூரத் தினத்திலே அவதரித்தார்.

இவர் இயற்றிய பாசுரங்கள்
திருப்பாவை 30 பாடல்கள்.
நாச்சியார் திருமொழி 148 பாடல்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

ஆழ்வார்கள் பன்னிருவர் அருளிய பாசுரங்களை நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் எனக் கூறுவர். நாலாயிரம் என்ற கணக்கு நிறைவதற்காக இறுதியில் இராமாநுஜ நூற்றந்தாதியும் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. எனவே இத்தொகுப்பில் பதின்மூன்று பேர் இயற்றிய 25 நூல்கள் அடங்குகின்றன.

பெயருக்கமைய நான்கு ஆயிரங்களாக இது பிரிக்கப்பட்டுள்ளது. முதலாயிரம், திருமொழி, திருவாய்மொழி, இயற்பா என்பது அப்பிரிவாகும்.

| | | |
|---|---|---|
| பெரியாழ்வார் | திருப்பல்லாண்டு | 12 |
| | திருமொழி | 461 |
| ஆண்டாள் | திருப்பாவை | 30 |
| | நாச்சியார் திருமொழி | 140 |
| குலசேகராழ்வார் | பெருமாள் திருமொழி | 105 |
| திருமழிசையாழ்வார் | திருச்சந்தவிருத்தம் | 120 |
| | நான்முகன் திருவந்தாதி | 96 |
| தொண்டரடிப்பொடியாழ்வார் | திருமாலை | 45 |
| | திருப்பள்ளியெழுச்சி | 10 |
| திருப்பாணாழ்வார் | அமலனாதிப்பிரான் | 10 |
| மதுரகவியாழ்வார் | கண்ணிநுண் சிறுத்தாம்பு | 11 |
| திருமங்கையாழ்வார் | பெரிய திருமொழி<br>திருக்குறுந் தாண்டகம்<br>திருநெடுந் தாண்டகம்<br>திருவெழுகூற்றிருக்கை<br>சிறிய திருமடல்<br>பெரிய திருமடல் | 1253 |
| பொய்கையாழ்வார் | முதல் திருவந்தாதி | 100 |
| பூதத்தாழ்வார் | இரண்டாந் திருவந்தாதி | 100 |
| பேயாழ்வார் | மூன்றாந் திருவந்தாதி | 100 |
| நம்மாழ்வார் | திருவிருத்தம் | 100 |
| | திருவாசிரியம் | 7 |
| | பெரிய திருவந்தாதி | 87 |
| | திருவாய்மொழி | 1102 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைஷ்ணவ நூல்கள்

வைஷ்ணவ சம்பிரதாயம் வளர்ச்சிபெற்று, வளம்பெற்றுப் பரந்தோங்குவதற்கு அருமையான நுல்கள்பல காலங்காலமாக உருவாகி வந்துள்ளன. அவற்றில் முக்கியமான சில நூல்களின் வரிசையை இங்கு பார்க்கலாம்.

நால்வேதங்கள்
உபநிஷதங்கள்
இதிஹாசங்கள்
மஹாபுராணங்கள் - கருட புராணம், நாரத புராணம், விஷ்ணு புராணம், பாகவத புராணம்
பிரம்ம சூத்திரம் (வேதாந்த சூத்திரம்) - பாதராயணர்
விஷ்ணுதர்மோத்தரம்
பகவத்கீதை
நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
இராமானுஜர் இயற்றிய **ஸ்ரீபாஷ்யம்** என்னும் வேதாந்த சூத்திர உரை மற்றும்பல அவரால் இயற்றப்பட்ட நூல்கள்.
வேதாந்த தேசிகர் இயற்றிய குருபரம்பரைப் ப்ரபாவம் மற்றும் அவரால் இயற்றப்பட்ட பல நூல்கள்.
உபதேச ரத்ன மாலை - மணவாள மாமுனிகள்
அஷ்டப் பிரபந்தம் - பிள்ளைப் பெருமாளையங்கார்.
அருளாளப் பெருமாளின் நூல்கள். - ஞானசாரம், சப்தகாதை, பிரமேயசாரம், திருப்பதிக்கோவை, மாறனகப்பொருள்.
துளசிராமாயணம்
கம்பராமாயணம்
வில்லிபாரதம்
நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்துக்கு எழுந்த பல்வேறு உரைநூல்கள்.
இராமாநுஜ நூற்றந்தாதி (பிரபந்த காயத்ரி) திருவரங்கத்தமுதனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைஷ்ணவத் திருத்தலங்கள்

விஷ்ணு வழிபாட்டுக்குரிய சிறப்பான வைஷ்ணவத் திருத்தலங்களைத் திவ்ய தேசங்கள் எனக் குறிப்பிடுவது மரபு. ஆழ்வார்களால் பாடப்பெற்ற தலங்களை மங்களாசாசனம் செய்யப்பெற்ற தலங்கள் எனபர்.

இத்தகைய பெருமைபெற்ற திவ்விய தேசங்கள் 108 உள்ளன.

திருத்தலங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. ஆர்ஷம் - ரிஷிகளால் ஏற்படுத்தப்பட்ட தலங்கள்.
2. பௌராணிகம் - புராணங்களில் விரித்துரைக்கப்பட்டவை.
3. ஸ்வயம் வ்யக்த ஸ்தலம் - (சுயம்புத்தலம்) - தாமே தோன்றியவைகள்
4. தைவம் - தேவர்களால் உண்டாக்கப்பட்டவை
5. மானவம் - மன்னர்களாலும் அடியார்களாலும் உருவாக்கப்பட்டவை
6. அபிமான ஸ்தலம் - ஆசார்ய புருஷர்களால் அபிமானிக்கப்பட்டவை

**ஸ்வயம் வ்யக்த ஸ்தலங்கள் (அட்ட சுயம்புத் தலங்கள்)**

| | |
|---|---|
| ஸ்ரீரங்கம் | நைமிசாரண்யம் |
| திருமுஷ்ணம் | தோத்தாத்திரி |
| திருவெங்கடமலை | புஷ்கரக்ஷேத்திரம் |
| சாளக்கிராமமலை | பதரிகாசிரமம் |

**நவ திருப்பதிகள்**

ஸ்ரீவைகுண்டம், வரகுணமங்கை(நத்தம்), திருப்புளியங்குடி, பெருங்குளம்(திருக்குளந்தை), தொலைவில்லி மங்கலம்- இங்கு இரு தலங்கள், தென்திருப்பேரை, திருக்கோளூர், ஆழ்வார் திருநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைஷ்ணவம் -- தோற்றமும் வளர்ச்சியும்

## விஷ்ணுவழிபாட்டின் தொன்மை

வரலாற்றாசிரியர்களின் ஆய்வறிவின் எல்லைக்கப்பால் மிகத் தொன்மையானதாகக் கருதப்படும் இரண்டு வரலாற்றுக் காலங்கள் உண்டு. ஒன்று வேதகாலம். மற்றது சிந்து வெளி நாகரிக காலம் இரண்டிலும் விஷ்ணுவழிபாட்டுக்கான ஆதாரங்கள் உள்ளன.

சிந்துவெளிநாகரிகம் என்பது கி.மு 3000ஆண்டுகளுக்கு முற்பட்டது. அதாவது இற்றைக்கு சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது. இது இலக்கிய ஆதாரங்கள் எதுவுமின்றித் தொல்பொருட் சான்றாதாரங்களை வைத்து ஊகங்களின் அடிப்படையில் ஆராயப்படும் வரலாற்றுக் காலமாகும். சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களில் பாம்புடன் கூடிய ஒரு சிறுவனின் வடிவம் பொறித்த இலச்சினை ஒன்றும் இருந்திருக்கிறது. இதைக் காளிங்க நர்த்தனத்துடன் தொடர்பு படுத்தி விஷ்ணுவழிபாட்டின் ஆதாரமாக அறிஞர் சிலர் கருதுவர்.

வேதகாலம் என்பது கி.மு. 1500 ஆண்டுகளுக்கு முந்தியது. அதாவது இற்றைக்குச் சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. (இக் காலகட்டக் கணக்கு வரலாற்றாய்வாளர்களின் கருத்து. ஆனால், ஆஸ்திகர்களாகிய எம்மைப் பொறுத்தவரை வேதங்கள் இறைவனைப்போல என்றும் உள்ளவையே.) வேதகாலமானது தொல்பொருட் சான்றுகள் எதுவுமின்றி ஆனால் தெளிவான வேத இலக்கியங்களின் ஆதாரத்தைக் கொண்டதாகும். உலக வரலாற்றிலேயே ஆதி இலக்கியமாகப் போற்றப்படும் ருக் வேதத்திலே ஆதித்தியர்களில் ஒருவராக விஷ்ணு போற்றப்படுகிறார்.

விண்ணும் மண்ணும் வியாபித்து நிற்பவன், மூவடியால் உலகளந்தவன், அகன்ற அடிச்சுவட்டினன் என்ற அடைமொழிகளால் விஷ்ணு (இருக்கு) ருக் வேதத்தில் போற்றப்படுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருக்காயன் (அகன்றசெலவினன்), உருக்கிரமன் (அகன்ற சுவட்டினன்) என்ற பெயர்களால் அவன் வழுத்தப்படுகின்றான். ஒளிமிக்க விழிகளோடு சுவர்க்கத்திலிருந்து கீழ் நோக்கும் உயர்நிலையும் எவராலும் காணமுடியாதவாறு வானில் பறக்கும் இயல்பும் உடையவன் என வேதங்கள் போற்றுகின்றன.

## விஷ்ணுவழிபாட்டின் வளர்ச்சி

வேதசங்கிதைகளையடுத்து பிராம்மணங்கள் என்ற கிரியா விளக்க நூல்கள் வளர்ச்சியடைந்து யாக வழிபாட்டுகள் விரிவடைந்தபோது விஷ்ணு, யாகத்தின் அவிர்ப் பாங்களை ஏற்றுக்கொள்ளும் முதன்மையான ஒரு தெய்வமாக இருக்கின்றார். அவர் பல்வேறு அவதாரங்கள் எடுத்தமை பற்றிய குறிப்புக்களும் அங்கு காணப்படுகின்றன.

இதிகாச - புராணங்களில் விஷ்ணு தனித்துவமான ஒரு பெருந்தெய்வமாக விளங்கக் காணலாம். மகாபாரதம், இராமாயணம் ஆகிய இரு இதிஹாசங்களும் விஷ்ணுவின் இரு அவதாரங்களை முதன்மைப் படுத்தியே உருவாக்கம் பெற்றவை. இராமவதாரம் பற்றியது இராமாயணம். கிருஷ்ணாவதாரம் பற்றியது மகாபாரதம். இராமாயணத்தில் இராமர் ஒரு சிறந்த மனிதனாக வாழ்ந்து காட்டுகிறார். மகாபாரத்தில் கிருஷ்ணர் தெய்வ நிலையிலிருந்து கீதோபதேசம் செய்வதோடு மனிதர்களின் துணைவராக நின்று வழிநடத்துகிறார். இங்கு அவருடைய மாயச் செயல்கள் மனித அறிவுக்கு அப்பாற்பட்டவை. இதனால்தான் இராமனைப் பார்த்து நட, கிருஷ்ணனைக் கேட்டு நட என்னும் முதுமொழி தோன்றிற்று.

மகாபாரதத்தில் பாண்டவ - கௌரவரின் போர் என்பதுதான் முதன்மையானது. அதன் சூத்திரதாரியாகவே கிருஷ்ணர் விளங்குகிறார். கிருஷ்ணவதாரத்தின் முழுமையான பெருமைகளையும் சிறப்புக்களையும் விபரித்து எழுந்தது பாகவத புராணம். பகவான் என்ற உயர்ந்த பெயரை விஷ்ணுவுக்கு அளித்து அவரது மகிமை கூறுவதால் பாகவதம் என்ற பெயரில் இப்புராணம் எழுந்தது. இவ்வாறே பகவானின் அடியவர்கள் பாகவதர்கள் என அழைக்கப்படுவதும் கவனிக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகவதம் மட்டுமல்லாமல் மஹாபுராணங்கள் பதினெட்டில் நான்கு புராணங்கள் விஷ்ணு புராணங்கள் எனப் போற்றப்படுகின்றன. பாகவதம், காருடம், நாரதீயம், விஷ்ணுபுராணம் என்ற இந்த நான்கு புராணங்களை விட சிவபுராணங்கள் சிலவும் மத்ஸ்யம், கூர்மம் என விஷ்ணுவுடன் தொடர்புடையவையாக அமைகின்றன. மகா புராணங்களில் பல, சுமார் இராண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

மௌரியர் காலத்தில் (கி.மு2) வாசுதேவ கிருஷ்ணர் வழிபாடு மேலோங்கியிருந்தது. தட்சசீலத்தில் ஆட்சிசெய்த ஹெலியோ டொறஸஸ் என்பவன் பெஸ்நகர் என்ற இடத்தில் நிறுவிய கருடத்தம்பம் இதற்குச் சான்று.

குப்தர் காலம் ஆகிய கி.பி 4, 5ஆம் நூற்றாண்டுகளில் உருவாக்கப்பட்ட நாணயங்களில் இலக்குமி, கருடன் போன்ற உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்ததுடன் அக்காலத்தில் விஷ்ணுவின் உருவச் சிலைகளும் உருவாக்கப்பட்டன என்று தொல்லியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குப்தமன்னர் பலர் விஷ்ணு அடியார்களாக இருந்தனர். தம்மைப் பாகவதர்கள் என அவர்கள் குறிப்பிட்டனர்.

## பழந்தமிழர் நாகரிகத்தில் திருமால் வழிபாடு:

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழ் இலக்கியங்களாகிய சங்கநூல்களில் திருமால் பெருமையை நாம் காணலாம். மாயோன் மேய காடுறை உலகம் எனத் தொல்காப்பியம் சுட்டுகிறது. நானிலங்களுள் ஒன்றான முல்லை நிலத்தின் (காடும் காடு சார்ந்த இடமும்) தெய்வமாக மாயவன் ஆகிய திருமால் வழிபடப்பட்டிருக்கிறார். பரிபாடல், முல்லைப்பாட்டு ஆகிய சங்க இலக்கியங்களில் திருமாலைப் போற்றும் பாடல்கள் காணப்படுகின்றன. சிலப்பதிகாரம் திருவேங்கடத்திலுள்ள திருமாலின்நின்ற திருக்கோலம், பள்ளிகொண்டகோலம் ஆகியவற்றை வர்ணிக்கிறது.

கிராமிய முறையில் திருமாலை வழிபடுகின்ற செய்திகளை நாம் சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்திலும் அறிய முடிகிறது. ஆய்ச்சியர் குரவை என்ற பாடலுடன் இணைந்த கூத்து, முல்லைநில ஆயர்களுக்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமால்குன்றம், திருவேங்கடம், திருவரங்கம், ஆடகமாடம், மணிவண்ணன் கோட்டம் முதலிய திருமால் பதிகள் பற்றிப் பழந்தமிழ் நூல்களில் நாம் காணலாம்.

## உலகின் ஏனைய பாகங்களில் விஷ்ணு வழிபாட்டின் தொன்மை

வாசுதேவ கிருஷ்ணர் என்பவரை முதன்மையாகக் கொண்ட பாகவத சமயம் மிகப்பழைய காலம் முதல் உலகெங்கும் சிறந்து விளங்குகிறது. மெசப்பொத்தேமியாவில் 18அடி முதல் 22அடிவரை உயரமான கிருஷ்ணர் சிலைகள் இருக்கின்றன. ஆர்மீனியாவில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே கிருஷ்ணர் ஆலயங்கள் இருந்தமைக்கான சான்றுகள் கிட்டியுள்ளன.

## விஷ்ணு வழிபாட்டில் சமயநெறிமுறையின் தோற்றம்

விஷ்ணுவாகவும், வாசுதேவ கிருஷ்ணராகவும், மாயோன் ஆகவும் பல்வேறு வகையில் புகழ்ந்து பாடி வழிபடப்பட்ட மஹாவிஷ்ணுவைத் தனிப்பெரும் தெய்வமாகக் கொண்டு வழிபாடு செய்யும் நெறிமுறைகளும் தத்துவ சிந்தனைகளும் உருப் பெற்று வளம் பெற்றது. ஆகமங்களின் தோற்றத்தையடுத்தே இது நிகழ்ந்தது. என அறிஞர் பலர் கருதுவர். இறைவாக்காக வெளிப்படுத்தப் பட்டதாகவும் தொன்று தொட்டு நிலவி வருவனவாகவும் புனிதமானவையாகவும் கருதப்படுகின்றன ஆகம நூல்கள்தான் (ஆ-கம-இறைவனிடமிருந்து வந்தது) தனித்தனித் தெய்வ வழிபாட்டுமுறைகளை வெளிப்படுத்திச் சமயங்கள் என்ற வாழ்க்கை நெறிகளை உருவாக்கித் தந்தன.

இத்தகைய ஆகமங்கள் கி.பி.4ஆம், 5ஆம் நூற்றாண்டளவிலேயே தோற்றம் பெற்றிருக்கலாமெனப் பல அறிஞர்கள் கருதுகின்றனர்.

சிவனை முழுமுதல் கடவுளாகக் கொண்ட சைவசமயத்தின் அடிப்படை நூல்களாகச் சிவாகமங்கள் 28உம் உபாகமங்கள் 207உம் இருப்பது போல, விஷ்ணுவை முழுமுதல் கடவுளாகக் கொண்ட வைஷ்ணவ சமயத்தின் அடிப்படை நூல்களாக வைகானசங்களும், பாஞ்சராத்திரங்களும் விளங்குகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைஷ்ணவ சமயத்தில் தத்துவ சிந்தனைகள்

சிவாகமங்களின் வழிநூல்களாக அஷ்டப் பிரகரணங்கள் தோன்றி வளர்ந்த அதேநேரத்தில் தென்னகத்திலே தோற்றம் பெற்ற நாயன்மார்களின் அருளிப்பாடுகளின் சாரமாகவும் ஆகமங்களின் ஞானபாத விளக்கமாகவும் சைவசித்தாந்த சாஸ்திரங்கள் தோற்றம் பெற்றுச் சைவசமய தத்துவ சிந்தனைகளை வளர்த்தெடுத்து வளம்படுத்தி ஒழுங்கு படுத்தின. இதேபோலவே வைஷ்ணவ ஆகமக் கருத்துக்கள் வைணவத் தமிழடியார்களான பன்னிரு ஆழ்வார் பாடல்களில் வெளிப்பட்டுப் பின்னர் இராமானுஜாசாரியாரின் தத்துவ சிந்தனைகளில் நெறிப்படுத்தப்பட்டன.

கி.பி.பதினோராம் நூற்றாண்டளவில் தமிழ்நாட்டில் தோற்றிய இராமானுஜர் வைஷ்ணவ பக்தி மார்க்கத்துடன் தத்துவ சிந்தனைகளையும் இணைத்து விசிஷ்டாத்துவைத தத்துவத்தை உருவாக்கினார். பரப்பிரமத்தை முதன்மைப்படுத்தும் சங்கர வேதாந்தத்துக்கும் சிவனை முதன்மைப்படுத்தும் சைவ சித்தாந்தத்துக்கும் இடைப்பட்ட ஒரு போக்கினைக் கொண்டதாக விஷ்ணுவை முதன்மைப்படுத்தும் விசிஷ்டாத்துவைத வேதாந்தம் அமைந்தது.

விஷ்ணுபக்தியை முதன்மைப்படுத்திய இராமானுஜரின் சீடர்களால் வைஷ்ணவ சமய நெறியானது தென்னிந்தியாவிலும், வட இந்தியாவிலும் பரவி வளர்ந்தது. சைவசமயத்துடன் பல இடங்களில் முரண்பட்டு முட்டி மோதிக் கொண்டும் சில இடங்களில் பின்னிப் பிணைந்து அரவணைத்துக் கொண்டும் வைஷ்ணவ சமயம் வளராலாயிற்று.

## சைவசமயத்தில் விஷ்ணுவின் நிலை

சைவசமயக் கோட்பாடுகளின் படி பரமசிவனால் அதிட்டிக்கப்படும் தெய்வங்களுள் ஒருவராக விஷ்ணு சிறப்பிடம் பெறுகின்றார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களில் காத்தல் தொழிலைச் செய்பவராக விஷ்ணு போற்றப்படுகின்றார். சிவனின் வேறல்லாது அவரோடிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசக்தியின் இன்னொரு வடிவமே விஷ்ணு என்ற உயர்ந்த கருத்தும் நிலவுகின்றது.

"அரியாலால் தேவியில்லை ஐயன் ஐயனார்க்கே" என்ற திருமுறை வாக்கு இங்கு நோக்கத்தக்கது.

உமாதேவியாகிய சக்தியும், விஷ்ணுவும் சகோதரர்கள் எனப் புராணங்கள் கூறுவதும் இருவரும் ஒரே நிறமாக - நீல வண்ணத்தவர்களாக உருவகப்படுத்தப்படுவதும் இக்காரணம் பற்றியே. உமையோடு சரிபாதியாக சிவனின் அரத்தநாரீஸ்வர வடிவம் இருப்பது போலவே விஷ்ணுவோடு சரிபாதியாகச் சிவனின் அரியர்த்தர் (சங்கரநாரயணர்) வடிவம் இருப்பதும் ஒப்பிட்டு நோக்கற்பாலது.

இக்காரணங்களால் மறந்தும் புறம் தொழார் என்று கூறப்படுவதற்கிணங்க விஷ்ணுவைத் தவிர வேறு தெய்வங்களை வழிபடாத வீர வைஷ்ணவர்கள் போலல்லாமல் சைவசமயத்தவர்கள் சிவபிரானுக்கு அடுத்த படிநிலையில் விஷ்ணுவையும் வழிபட்டு வருவதைக் காணலாம்.

சிவாகம விதிமுறைப்படி அமைந்த எல்லாக் கிரியைகளிலும் விஷ்ணுவுக்கும் முக்கியமான ஓரிடம் வழங்கப்படுவதைக் காணலாம். பிரதிஷ்டையின் போதும் நியாசங்களயின்போதும் சைவத் திருவுருவங்கள் யாவும் பிரம்மபாகம், விஷ்ணுபாகம், ருத்ரபாகம் என மூன்றாக வகுக்கப்படுவதை இங்கு முக்கியமான ஓர் உதாரணமாகக் காட்டலாம். சிவலிங்கத் திருவுருவத்தில் நடுப்பகுதியான ஆவுடையார் என்னும் சக்தி விஷ்ணுபாகமாகக் கூறப்படும் நிலையை இத்துடன் இணைத்துச் சிந்திக்கலாம்.

## ஈழத்தில் விஷ்ணு வழிபாடு

ஈழத்திலே மிகத் தொன்மையான காலத்திலே (இயக்கர், நாகர் முதலியோர் வாழ்ந்த காலப்பகுதியாகிய கி.மு.காலத்தில்) உப்புலவன் (நீலத்தாமரை நிறத்தவன்) என வழிபடப்பட்ட தெய்வம் விஷ்ணுவே என ஆய்வாளர் கருதுவர்.

பொலநறுவையில் செய்யப்பட்ட அகழ்வாராய்ச்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டறியப்பட்ட பல கோயில்களில் ஐந்து விஷ்ணுகோயில்களும் அடங்குகின்றன. இவை சோழர் காலத்தவை எனக் கருதப்படுகின்றன.

புராதனமான சிவாலங்களோடு ஒத்து நோக்கத்தகும் வகையில் தேவேந்திரமுனையில் ஒரு விஷ்ணு கோவில் இருந்து அது முற்றாக அன்னியரால் அழிக்கப்பட்டு விட்டது.

ஒல்லாந்தர் காலத்திலிருந்தே யாழ்ப்பாணம் வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் இருக்கிறது. பருத்தித்துறை வல்லிபுரம் சக்கர ஆழ்வார் கோயில், பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் என்பன தக்ஷிணகைலாச புராணத்தில் பேசப்படுகின்றன. யாழ்ப்பாபணத்தின் பிரபல விஷ்ணு ஆலயங்களாக இவை விளங்குகின்றன. தென்னிலங்கையில் தெஹிவளை விஷ்ணு கோவில், முகத்துவாரம் விஷ்ணு கோவில், கிழக்கிலே திருமலை கிருஷ்ணன் கோவில், வன்னியிலே வட்டக்கச்சி கிருஷ்ணன் கோவில், யாழ்ப்பாணத்திலே கோண்டாவில் வல்லிபுர ஆழ்வார் கோவில், அளவெட்டி வரதநாராயணர் கோவில், கோப்பாய் கிருஷ்ணன் கோவில், காங்கேசன்துறை விஷ்ணு கோவில் முதலியன குறிப்பிடத்தக்கன.

### பஞ்சாயுத மகிமை

*திருமாலின் ஆயுதங்களான* ***சங்கு, சக்கரம், வில், வாள், கதை*** *என்பன பஞ்சாயுதங்கள் எனச் சிறப்பிக்கப்படுகின்றன. இவை காவலுக்குரியன. அதனால் குழந்தைகளின் கழுத்திலே பஞ்சாயுதங்கள் பொறிக்கப்பட்ட பதக்கத்தினை அணிவிப்பது இந்துக்களின் மரபு.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைஷ்ணவ தத்துவ சிந்தனைகள்

## வைஷ்ணவத்தின் அடிப்படை நூல்கள்

வைஷ்ணவ சமயத்தின் முக்கியமான அடிநாதமாக விளங்குவது பக்தி. பிரபக்தி அல்லது பரபக்தி என அழைக்கப்படும் சரணாகதி தத்துவத்திலேயே வைஷ்ணவ சமயம் வளர்ந்துள்ளது. பரம் பொருளாகிய விஷ்ணுவை மேலான முழுமுதலாகக் கொண்டு அவரை முற்றாகச் சரணடைதல் என்பதே இதன் விளக்கமாகும்.

பகவான் ஆகிய விஷ்ணு என்ற ஒரு கடவுளையே வழிபடுபவர்கள் ஆதலால் வைஷ்ணவர்கள் பாகவதர்கள், சாத்வர்கள், ஏகாந்திகள், பிரபந்நர்கள் என்ற பெயர்களால் சுட்டப்படுவர். ஒரே கடவுட் கோட்பாட்டை உடையபடியால் ஏகாயனம் என்ற பெயரும் வைஷ்ணவத்துக்குண்டு. பகம் என்ற சொல் ஐஸ்வர்யம், வீரம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் ஆகிய அருங்குணங்கள் ஆறைக் குறிப்பதாகும். ஆதனால்தான் பகவான் என்ற சொல் உருவாகிறது.

பாஞ்சராத்திரம் என்ற 108 வைஷ்ணவ ஆகமங்கள் பகவானால் சடகோபர் (நம்மாழ்வார்), சனகர், சாண்டில்யர், சுக்ரீவர், அநுமார், விபீஷணர் ஆகியோருக்கு உபதேசிக்கப்பட்டு அவர்களால் உலகில் வெளிப்படுத்தப்பட்டன. ஐந்து இரவுகளில் உபதேசிக்கப்பட்டது என்றும் அர்த்த பஞ்சகஞானம் என்னும் ஐவகை ஞானத்தை உபதேசித்தது என்றும் பலவாறு பெயர்க்காரணம் கூறுவர்.

சாங்கியம், யோகம், பௌத்தம், ஆருகதம், ஜைனம் எனும் ஐந்து தத்துவங்களும் பாஞ்சராத்திரத்தின் முன் இருளாகத் தோன்றுவதால் அப்பெயர் பெற்றது என்றும் சிறப்பான ஒரு காரணமாகும்.

இந்நூலில் பஞ்சதன்மாத்திரைகள், பஞ்சபூதங்கள், அஹங்காரம், புத்தி, அவ்யக்தம் என ஐந்து பாகங்கள் உள்ளன.

## இருவகை வழக்குகள்:

பாஞ்சரத்திர ஆகமங்களுக்கு முன்னரே மிகப் புராதனமான வைகானச ஆகமங்களும் வழக்கிலுண்டு. இருவகை நெறிமுறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் தனித்தனியே பின்பற்றும் ஆலயங்களும் அடியார்களும் பாரதத்தில் இருப்பதைக் காணலாம். பாஞ்சராத்திரங்களில் தலங்கள், தேவாலய நிர்மாணங்கள், விக்கிரகப் பிரதிஷ்டை முறைகள், பூஜாகாலங்கள், பூஜாத் திரவியங்கள், உற்சவங்கள், சம்புரோக்ஷணம், கிரியை செய்வோரின் தகைமைகள், தீக்ஷைகள் முதலியன விளக்கப்பட்டுள்ளன. வைகானசம் வேதத்துக்கு முதன்மை கொடுத்து நிற்பது. விகனசர் என்ற மகரிஷியால் உபதேசிக்கப்பட்டது என்பதால் இப்பெயர் பெற்றது. திருப்பதிக் கோவிலில் இவ்வாகமங்களே பின்பற்றப்படுகின்றன. பாஞ்சராத்திரம் தென்னகத்தின் ஆழ்வார் பாசுரங்களுக்கு முதன்மை கொடுப்பது. மேலக்கோட்டை எனப்படும் திருநாராயணபுரம், ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம் ஆகிய ஆலயங்களில் பாஞ்சராத்திர சம்ஹிதையின்படி கிரியைகள் நடைபெறுகின்றன.

## இராமநுஜாசாரியார்:

ஆதிசேஷனின் அவதாரமாக் கருதப்படும் ஸ்ரீ இராமநுஜாசாரியார் தென்னிந்தியாவிலே ஸ்ரீபெரும்புதூர் என்ற இடத்திலே 11ஆம் நூற்றாண்டில் அவதரித்தவர். கேசவ சோமபாரதி, காந்திமதி அம்மை ஆகிய பெற்றோருக்குப் புதல்வராக இளையாழ்வார் என்னும் இயற்பெயருடன் பிறந்து வளர்ந்த இராமாநுஜர் காஞ்சிமாநகரிலே யாதவப் பிரகாசர் என்பவரிடம் வேதாந்தம் பயன்று அதன்பின் ஆளவந்தார் எனப் புகழ்பெற்ற யமுனாசாரியாரின் ஆத்மார்தத சிஷ்யராகி யதிராஜ் என்னும் தீட்சாநாமம் பெற்று (சந்யாச குரு- பெரியநம்பியின் (ஆளவந்தாரின் சீடன்) மூன்று பெரு விருப்பங்களை நிறைவேற்றியதன் மூலம் வைஷ்ணவ சமயத்தின் பெருங்குருவாக விளங்குகிறார். எம்பெருமான், உடையார், திருப்பாவைஜீயர் ஆகிய பெயர்களாலும் இவர குறிப்பிடப்படுகின்றார்.

பராசரர் செய்த விஷ்ணு புராணத்தைப் பரப்பியமை, நம்மாழ்வார் புகழை நாடறியச் செய்தமை, பிரம்ம சூத்திரத்துக்கு விசிஷ்டாத்வைத உரை வகுத்தமை என்பனவே அவர் செய்த அம்மூன்று அருஞ்செயல்கள். விசிஷ்டாத்துவைத வைஷ்ணவ சமய தத்துவ நெறியை வகுத்துப் பல சீடர்களை உருவாக்கி 74 சமய பீடங்களைப் பல்வேறு இடங்களிலும் ஸ்தாபித்து அரும்பெரும் சாதனையை நிகழ்த்தினார் இராமாநுஜர். இவர் எழுதிய நூல்களாவன, ஸ்ரீபாஷ்யம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாந்த சாரம், வேதாந்த தீபம், வேதாந்த சங்கிரகம், கீதாபாஷ்ணம், சரணாகதி தத்வம், ஸ்ரீரங்கத்யம், ஸ்ரீ வைகுண்டகத்யம் முதலியன.

## வைஷ்ணவ தத்துவத்தின் தோற்றம்:

ஆதி நூல்களாகிய வேதங்களின் ஞானபாதமாகிய உபநிடதங்களின் சாரமாக வேதாந்தசூத்திரமென்னும் பிரம்ம சூத்திர நூலை பாதராயணர் இயற்றினார். இதற்குச் சங்கரர் இயற்றிய மகாபாஷ்யத்தை மறுத்து ஸ்ரீபாஷ்யம் என்னும் விசிஷ்டாத்வைத உரை விளக்கத்தை இராமாநுஜர் இயற்றினார். இதன் அடிப்படையிலேயே வைஷ்ணவ சமய தத்துவ சிந்தனைகள் வளர்த்தெடுக்கப்பட்டன. பன்னிரு ஆழ்வார்களால் பாடப்பெற்ற திவ்யப் பிரபந்தங்கள் வைஷ்ணவ சமயக் கருவூலமாக விளங்குகின்றன. இவற்றில் முக்கியமானது நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி ஆகும். இந்நூல் வேதசாரமாக அமைந்தது. இதனைத் திரமிடோபநிடதம் என வேதாந்த தேசிகர் போற்றுவார். இராமாநுஜரின் தத்துவ சிந்தனைகளுக்கு இப்பாசுரங்களும் மூலகாரணமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

## வைஷ்ணவ விசிஷ்டாத்வைத தத்துவ உண்மைகள்:

உள்பொருட்கள் பல எனும் பன்மைவாதக் கோட்பாட்டையும் ஆன்மாக்கள் பல எனும் அநேகான்மாவாதக் கோட்பாட்டையும் ஏற்கும் வைஷ்ணவம், பிரம்மம் - ஆன்மா - உலகம் என்னும் தத்துவத் திரயங்களை (உள்பொருள் மூன்று) அடிப்படையாகக் கொள்கிறது. பதி-பசு-பாசம் எனும் சைவ சித்தாந்த முப்பொருட் கொள்கையோடு இது ஒப்பிட்டு நோக்கப்படலாம். இம்மூன்று பொருட்களும் சத்து-சித்து-அசித்து எனப்படும்.

இம்முப் பொருட்களும் தமக்கிடையிலே வேறுபட்ட இயல்புகளை உடையன. அவ்வேறுபாடுகள் பேதம், அபேதம், போதாபேதம் என மூன்று நிலையில் விஜாதீயபேதம், சுஜாதீயபேதம், சுவகதபேதம் என மூவகைப்படுகின்றன.

உலகம் - உயிர் - இறைவன் ஆகிய இம்மூன்று பொருள்களுக் கிடையிலுள்ள சம்பந்தம் சரீரசரீரி சம்பந்தம் என்று விளக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது உலகம் சரீரமானால் உயிர் அதன் சரீரி. (சரீரி - சரீரத்தை கொண்டிருக்கும் உயிர்). உயிர் சரீரமானால் இறைவன் சரீரி. இவ்வாறு பூவில் மணம் போலவும், பாலில் வெண்மை போலவும் பிரிக்க முடியாத இந்தத் தொடர்பு அப்பிரதக்சித்தி எனப்படும்.

ஆன்மாக்கள் என்பது மாயத்தோற்றம் என்று சங்கரர் கூறும் மாயாவாதத்தை மறுப்பதனால் வைஷ்ணவம் மாயாமறுப்பு வாதம் எனப்படுகிறது. காரியப் பொருளும் காரணப்பொருளும் உண்மையே. பால் தயிராக மாறுவது போல் பரிணாமமடைகின்றன என்று கூறும் இக்கருத்து பரிணாமவாதம் எனப்படும்.

ஆன்மாக்கள் அடிப்படையில் ஒரே தன்மையானவை. இவை மூவகை நிலைகளில் உள்ளன.

1.என்றுமே முத்திநிலையிலுள்ளவை.

2.பெத்தநிலையிலிருந்து (பிறப்பெடுத்து) முத்தி நிலைக்கு வந்தவை.

3.பெத்த நிலையிலுள்ளவை. (இனி முத்தியடையப் போகின்றவை)

## வைஷ்ணவ தத்துவசாரம்:

பிரம்மமாகிய விஷ்ணு சடப்பொருக்களைப் பயன்படுத்தி உலகைப் படைக்கின்றார். ஆதி மூலப்பரம்பொருளாய், எங்கும் நிறைந்த ஞானப்பரம்பொருளாய் இருபத்து நான்கு தத்துவம் கடந்த 25ஆவது தத்துவமாய் பரவாசுதேவ ஸ்வரூபமாக அவர் வீற்றிருக்கின்றார். ஸ்ரீவைகுண்டத்தில் பாம்பணையில் அறிதுயில் கொண்டிருக்கும் ஸ்ரீமத் நாராயண பரம்பொருள் தமது நாபிக் கமலத்தில் பிரம்மதேவரை உண்டாக்கிப் படைத்தலைச் செய்கிறார். ஆன்மாக்கள் பஞ்ச பூதங்களாலான அந்த உலகைப் பயன்படுத்தி இன்பதுன்பங்களை அனுபவித்து வருகின்றன. சடப்பொருள்களிலிருந்து விடுபட்டு மகாவிஷ்ணுவினுடைய ஸ்ரீ வைகுண்டத்தை அடைவதே முத்திநிலை ஆகும். இதற்கு வழியாக பக்தி மார்க்கத்தையே வைஷ்ணவம் போதிக்கின்றது. இறைவனிடம் பூரணமாக சரணாகதியடைகின்ற பிரபக்திமார்க்கமே மிகச்சிறந்ததாகக் கருதப்படுகின்றது. பக்தியோடு ஞானமும் தேவை என்பதால் அதனைத் தர்மபூதஞானம் என்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைஷ்ணவ நெறிமுறை வாழ்க்கையில் அர்த்த பஞ்சக ஞானம் பெறுதல் குறிக்கோளாகும். அதற்கு வழியாக பஞ்ச சம்ஸ்காரம், பஞ்ச கர்மாக்கள், ரஹஸ்ய த்ரயம் முதலியன இருக்கின்றன. உண்மை அடியார்களுக்கு ஓடிவந்து அருள்தரும் நாராயண பரம்பொருள் பரம், வியூகம் முதலிய ஐந்து நிலைகளில் தம்மை வெளிப்படுத்துகிறார். மேலும் வேண்டியபோதெல்லாம் ஆபத் பாந்தவனாகவும் மார்க்க பந்துவாகவும் அருள் செய்கிறார்.

வைஷ்ணவ சமயத்தில் யாதவம், மாயாதம், ஹிரண்யகர்ப்பம், இராமாநுஜீயம், பாஸ்கரம், தத்துவவாதம் என ஆறு உட்பிரிவுகளும் உள்ளன.

**கைங்கர்யம்**

*இறைவனுக்குமட்டுமன்றி இறையடியார்களுக்கும் பாதசேவை புரிதலே கைங்கர்யம் என வைஷ்ணவத்திலே சிறப்பிக்கப்படுகிறது. வைஷ்ணவத்தின் உண்மையான அடிநாதமே இதுதான் என்றும் கூறலாம். சைவ சமயம் கூறும் மாகேஸ்வர பூசையுடன் இதனை ஓரளவு ஒப்பிட்டு நோக்கலாம். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று சொல்லப்படுவதற்கிணங்க சமூகசவை, அடியார் தொண்டு, அன்னதானம் என்பன இதிலடங்கும். கைங்கர்யத்தின் நோக்கம் கைங்கர்யமே என்ற உணர்வுடன் பிரதிபலன் எதிர்பாராத தியாக நோக்குடன் "என்கடன் பணி செய்து கிடப்பதே" எனப் பணிசெய்து வாழ்தலே கைங்கர்யமாகும்.*

## விஷ்ணுவுக்குரிய வாகனங்கள்

கருடன், அனுமான், சேஷ வாகனம் எனப்படும் பாம்பு என்பன சிறப்பானவை. சிங்கம், யானை, குதிரை, காராம்பசு ஆகியவற்றிலும் வீதி வலம் வருவதுண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைஷ்ணவ இலக்கணம்

ஓர் உண்மை வைஷ்ணவன் எப்படி இப்பான்? என்பதற்கு இப்படி ஓர் விளக்கம் தரப்படுகிறது.

கொக்குப் போல் இருப்பான்
கோழி போல் இருப்பான்
உப்புப் போல் இருப்பான்
உன்னைப்போல் இருப்பான்

ஸ்ரீ ராமாநுஜரின் சீடராகிய அனந்தன்பிள்ளை என்பவர் தமது சீடர் ஒருவருக்குக் கொடுத்த விளக்கமே இது.

கொக்கு நீர்க்கரையில் இருந்து ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் காத்திருப்பதுபோல வைஷ்ணவனும் பரமபதம் என்னும் உயர்நிலை கிட்டும்வரை வேறு விடயங்களில் கவனம் செலுத்தாது காத்திருக்கவேண்டும்.

கோழி குப்பையைக் கிளறி அங்கிருந்து தனக்கு வேண்டிய உணவைமட்டும் எடுத்துக்கொள்வதுபோல வைஷ்ணவனும் உலகியல் வாழ்வில் நல்ல சாரமுள்ள விடயங்களை மட்டுமே பொறுக்கி எடுத்துக்கொள்ளவேண்டும்.

உப்பு இன்றி உணவு சுவைக்காது. ஆனால் சிறிது அதிகமானால் உணவை உண்ணவே முடியாது. வைஷ்ணவன் பலருடனும் கலந்து பழகி சமுதாய நலனுக்கு உழைப்பவனாக இருக்கவேண்டும். ஆனால் நான் என்ற ஆணவ முனைப்பு இருக்கக்கூடாது.

உன்னைப்போல என்பது அந்த சீடரைப்போல எனப் பொருள் தரும் . அந்த சீடர் எத்தனையோ துன்பங்களையும் அவமானங்களையும் தாங்கிக்கொண்டு குருவிடம் முழுமையான விசுவாசத்துடன் இருந்தவர். அவரைப்போல குருபக்தியுடன் இருக்க வேண்டுமென்பது பொருள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாளக்கிராமம்

ஆத்மார்த்த பூஜையில் விஷ்ணுவை வழிபட உதவும் பொருள் சாளக்கிராமம். விநாயகர், சிவன், சக்தி, விஷ்ணு, சூரியன் என்ற ஐந்து மூர்த்திகளை ஒருசேரப் பூஜிக்கும் பஞ்சாயதன பூஜையிலும் விஷ்ணுவின் இடத்தில் சாளக்கிராமமே பயன்படுகிறது. சிவலிங்கம் அல்லது ருத்திராட்சம் போல இதுவும் இயற்கையின் கொடையாக வந்த இறைவழிபாட்டுப் பொருளாகும்.

திபெத்திற்குத் தெற்கே சாளக்கிராமம் என்ற ஊருக்கு அருகில் கண்டகி என்ற நதிக்கரையில் இக்கற்கள் கிடைக்கின்றன. கருமையும் வழவழப்பும் மினுமினுப்பும் உடைய இக்கற்களில் வச்சிர கடகம் என்ற பூச்சியினால் உண்டாக்கப்பட்ட துளைகள் இருக்கும் துவாரமுள்ளவையே பூஜைக்குகந்தவை.

இப்பூச்சியினால் உண்டுபண்ணப்பட்ட சில அடையாளங்கள் இக்கற்களில் இருக்கும். சங்கு, சக்கரம், புல்லாங்குழல் போன்ற அடையாளங்களும் தங்க ரேகைகளும் இருப்பது விசேஷம்.

மிளகின் அளவிலிருந்து தோடம்பழ அளவுவரை பலவித அளவுகளில் உருண்டை அல்லது நீள உருண்டையாக இவை காணப்படும்.

இவற்றில் இருவகை உண்டு.

1. ஜலஜா – தண்ணீர் நிறைந்து குளிர்மையும் பளபளப்பும் அதிகமாகக் காணப்படும்.

௨. இசுதலஜா – குளிர்மை, பளபளப்புக் குறைந்தவை.

வெள்ளை, நீலம், சிவப்பு ஆகிய வண்ணங்களிலும் உண்டு.

## விஷ்ணுவுக்கு சிறப்பான நிவேதனங்கள்

சர்க்கரைச் சாதம், புளிச்சாதம், தயிர்ச்சாதம் முதலிய அன்ன வகைகளும் லட்டு, முறுக்கு, சீடை, அவல், அதிரசம் முதலிய பட்சணங்களும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வானந்தமய பீடம்

## நாம் வணங்கும் தெய்வங்கள்

வடிவம் - வரலாறு - வழிபாடு

1. அருள் வழங்கும் மாரியம்மன்
2. ஆற்றல் பல நல்கும் ஆஞ்ஜனேயர்
3. துக்கம் துடைக்கும் துர்க்காதேவி
4. காப்பதில் வல்ல கருடபகவான்
5. வீரம் அருளும் வீரபத்திரரும் பத்திரம் நல்கும் பத்திரகாளியும்
6. நலம் பல நல்கும் நாராயணர்
7. ஆத்மபலம் அருளும் ஐயப்ப சுவாமி

கணினி வடிவமைப்பு
ஸ்ரீவித்யா கணினி அச்சகம்
கந்தசாமி கோவில் அருகில்,
இணுவில், சுன்னாகம்
☎ 021 224 1504

அச்சுப் பதிப்பு
ஷாம்பவி பதிப்பகம்
276, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 222 4143

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org